Registered as a News Paper

பொழிவு: 27
குவிப்பு: 05
பக்கங்கள்: 08
விலை: 50/-
புரட்டாதி

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2022"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 41வது புதிய ஆண்டுப்பயணம்"


# ஆன்மீகத் தந்தையை இழந்தது மன்னார்



மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணியாளர் அவுலின் இராயப்பு அடிகளார் 24.09.2022 அன்று கண்டி வைத்தியசாலையில் இறைபதம் அடைந்தார். இவரது இறந்த உடலானது 25.09.2022 அன்று கண்டி தேசிய குருமடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் மறுநாள் காலையில் கண்டியில் இருந்து மன்னார் ஆயர் இல்லத்திற்கு பவனியாக கொண்டுவரப்பட்டு 27.09.2022 அன்று காலை 08.00 மணியளவில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மாலை 03.00 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயரினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மன்னார் பொதுச் சேமக்காலையில் குருக்கள் துறவிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில் இலங்கை ஆயர் மன்ற தலைவர் மேதகு கலாநிதி கெரல்ட் அன்ரன் பெபேரா அவர்களும் இணைந்து எமது மறைந்த அருட் தந்தைக்காக செபித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் பணியாற்றியுள்ளதுடன் கல்விப் பணியிலும் தன்னை ஈடுபடுத்தி செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அடிகளார் மன்னார் சிறிய குருமட அதிபராகவும், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மற்றும் மன்.முருங்கன் ம.வி. ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அருட்தந்தையின் பணி வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் அடிகளாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்னா பத்திரிகை சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அடிகளாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாறவும் மன்றாடுகின்றோம்.

# கனியமண் அகழ்வுக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம்




மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கனியமண் அகழ்வு உள்ளடங்களாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டினால் 31.08.2022 அன்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகர் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மன்னார் நகர் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் மேதகு ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் உருவச்சிலைக்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி மன்னார் மாவட்டச் செயலக பகுதியை வந்தடைந்தது. பின்னர் போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் மாவட்டச் செயலகத்திற்கு முன் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வுக்கு எதிராகவும் மன்னார் பகுதியில் அமைக்கப்பட்ட உயர்மின்வலு காற்றாடிகளினால் ஏற்படும்பாதிப்புகள் குறித்தும்,தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற வீதிகள் தரமற்றதாக் காணப்படுகின்றமை குறித்தும், போதைப்பொருள் கடத்தலின் தளமாக மன்னாரை மாற்றி மன்னார் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்களுக்கு குறித்த நடவடிக்கைகளின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

→06

# மன்னாரில் வித்துக்கள் திரை வெளியீடு




07.10.2022 அன்று வித்துக்கள் என்னும் திரைப்படம் மும்மொழிகளிலும் இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிள் பதினைந்திற்கும் மேற்பட்ட நாடுகளிலும் வெளியிடப்படுகிறது இது முற்றிலும் மன்னார் வேதசாட்களின் வரலாறை அடிப்படைக்யாக்கொண்டதாகும் கொண்டதாகும் இதில் மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கும் .மேற்பட்ட கலைஞர்கள் உருவாக்கம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

# அருட்பணி பாக்கிய ரஞ்சிற் அவர்களின் 15ம் ஆண்டு நினைவு



அருட்பணி பாக்கிய ரஞ்சிற் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் சிறந்த பணியாற்றி இறுதியாக மன்னார் மறைமாவட்ட JRS அமைப்பிற்கு இயக்குனராக செயற்பட்டு கல்விப்பணி, ஆன்மீகப்பணி, பொருளாதார பணிகளை மேற்கொண்டிருந்தார் தமிழீழ வன்னிப்பகுதியிலே மிகப்பெரிய யுத்தகாலதத்திலே பயமறியாது துணிந்து தனது சேவையை வழங்கி வந்தார். 26.09.2007 அன்று கல்விளான் வன்னி நிலப்பரப்பில் பணிக்களத்தில் கிளைமோர் தாக்குதலினால் உயிரிழந்தார். இந்த வருடம் தந்தையுடைய 15வது விண்ணகப்பிறப்பின் நினைவும் அத்தோடு குருத்துத்தின் 25வது வருட நினைவுமாகும். தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர் இறைமக்கள் செபித்து நிற்கின்றோம்.

**மெல்போனில் இருந்து தந்தைக்கு ஒரு மடல்......**

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதியில் பாக்கியரஞ்சிற் அண்ணாவின் வீடு எங்களுக்கு பக்கத்து வீடு. சிறுவயதில் பெரும்பாலான மாலை நேரங்களும், பாடசாலை விடுமுறை நாட்களும் பேபி அன்டாவின்

→06

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

**கிறிஸ்து இயேசுவில் பிரியமான வாசகர்களே!**

உங்கள் அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள். இம்மாத இதழில் உங்கள் மனம் தேடும் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன். கடவுள் உலகை மிக அழகாக படைத்து அது நல்லதெனக் கண்டார். மனிதனையும் அதனை ஆண்டு வழிநடத்தும்படி படைத்தார். உலகப் படைப்பனைத்துக்கும் பொறுப்புள்ளவனாக அவனைப்படைத்தார். படைக்கப்பட்ட அழகிய உலகம்; மாண்புமிக்க மனித வாழ்வு, இன்று தலைகீழாக மாறிவிட்டது. உலகப் போர்கள், உலக அழிவு, தொற்று நோய்கள், அரசியல் பெருளாதார மாற்றங்கள், இவ்வாறான பல எதிர்வு கூறல்கள், இருந்தும் மனித வாழ்வு மாற்றம் அற்று சீரழிந்து போகிறது. விரைவாக பணம் சம்பாதிக்க, விரைவகப் பொருளாதாரத்தில் உயர, மனிதரை ஏமாற்றிப் பிழைக்க, இலஞ்சம் பெற்று வயிற்றை நிரப்ப, போதைப் பொருள் பயன்படுத்த, விற்பனை செய்து பணம் சம்பாதிக்க ஆசை, தவறென்று தெரிந்தும் பாதிப்புக்கள் உண்டென அறிந்தும் மனித குலத்தை சீரழிக்கின்ற செயலில் இந்த நாட்களில் மனிதன் ஈடுபடுகின்றான்.

உறவுகள் அழிந்து சொந்தங்கள் அன்னியராய் மாறும் நிலை உருவாகின்றது. பெற்றோர்கள் முதிர்ந்த வயதில் கவனிக்கப்படாமை, பிள்ளைகள் அன்பு செய்யப்படாமை, வற்புறுத்தி பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பாத கல்வியை ஊட்டல், குடிகாரக் கணவன், மகன்மாரால் விரக்தியடைவு, பொருளாதாரத்தில் வீழ்ந்து சமூகத்தில் நன்மதிப்பை இழந்து, திருமணத்தின் பண்புகள் இழந்து பெற்றோர் பொறுப்பிலிருந்து விலகி போதையால் திரியும் மனிதர்கள். இவ்வாறு குடும்பங்கள் சீரழிந்து சென்று கொண்டிருக்கின்றது. குடிகார தலைவனால் இளம் வயதில் மனைவி கணவனை இழந்தவளாகின்றாள் அல்லது அவன் நோயுற்றவனாகின்றான். பிள்ளைகள் தந்தையில்லாமல் வளர்கின்றார்கள். குடும்பம் சரிந்து விழுகின்றது. ஆசைப்பட்டு அமைத்த குடும்பம் அலைக்கழிந்து போகின்றது.

இதனால் சமூக சீர்கேடு இடம் பெறுகின்றது. போதைக்கு அடிமையான பிள்ளைகள் இளம் வயதில் வாழ்வை இழந்து விடுகின்றார்கள். போதை பாவிப்பது, போதை வியாபாரம் செய்வது மேலும் பலரை போதைக்கு அடிமையாக்குவது. இதனால் அவர்களுடைய கல்வியை இழக்கின்றார்கள். சொந்த வீடுகளில் ஏனைய இடங்களில் களவெடுக்க அலைகின்றார்கள். இதனால் குடும்ப உறவுகளை மதிக்க மறுக்கின்றார்கள். குடும்ப உறவுகளை இழக்கின்றார்கள். இதனால் அவர்களுடைய எதிர்காலம் கேள்விக் குறியாகின்றது. திருமணத் தடை வருகின்றது. குழந்தைப் பேறு குறைகின்றது. வலது குறைந்த பிள்ளைகள் பிறக்கிறார்கள். பரம்பரை சமூகம் அழிவடைகின்றது. பெற்றவர்கள் கண்ணீரில் மூழ்குகின்றனர். கல்வி புகட்டியோர் கவலையடைகின்றனர். எதிர்காலத்தில் நல்ல அறிவுள்ள, ஞானமுள்ள, இறை அனுபவமுள்ள, ஆளுமையுள்ள, உடல் நலமுள்ள மனிதர்கள் வாழ்வார்களா! என்பது கேள்விக்குறியே.

உருவற்ற உலகை இறைவன் உருப்பெறச் செய்து மகிழ்ந்தார். அவ்வுலகை நாம் அழிக்காமல் உருவாக்குவோம். இறைவனின் படைப்பில் பங்கேற்பாளர்களாவோம். மறைமாவட்ட மண் வாசைனையோடு பயணிப்போம். மனுக்குலத்தை, மண்ணைக் காப்போம். இறை மனித உறவை வளர்ப்போம், எதிர்காலத்தை உருவாக்குவோம்.

என்றும் கிறிஸ்துவில்
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரீஸ்**
மன்னா பதிப்பாசிரியர்

# கலையருவியின் ஏற்பாட்டில் நடாத்தப்படும்மன்னார் மறைமாவட்ட மட்டத்திலான கரோல் பாடல் போட்டி 2022

1. இப்போட்டி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெறும். கீழ்ப்பிரிவில் தரம் 05 முதல் தரம் 11 வரை பாடசாலை மாணவர்களும் மேற்பிரிவில் தரம் 12 முதல் திருமணமானவர்கள் வரை பெரியவர்களும் உள்ளடக்கப்படுவர். வயதெல்லை கிடையாது.

2 ஒவ்வொரு பிரிவினரும் குழுவாக ஒரு தமிழ் பாடலை பாடலாம்.

3. ஒரு பங்கில் இருந்து இரண்டு குழுக்கள் இப்போட்டியில் பங்கு எடுக்கலாம். (கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு)

4. ஒரு பிரிவைச்சேர்ந்தவர் மற்றைய பிரிவில் இணைய முடியாது.

5. ஒரு குழுவில் 07-15 பேர் மட்டுமே பங்கெடுக்கலாம்.

6. ஒரு பாடல் 06 நிமிடங்களிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

7. பாடல் புதிய படைப்பாக இருத்தல் வேண்டும். பாடல் வரிகள், இசை என அனைத்தும் புதிதாக ஆக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இருக்கும் பாடலாகவோ அல்லது தழுவலாகவோ இருத்தல் கூடாது. அவ்வாறெனின் உடன் எழுத்து மூலம் தெரியப்படுத்தல் வேண்டும்.

8. கரோல் பாடல் போட்டியில் இடம்பெறும் பாடலின் வரிகளை எழுதியவருக்கும், அப்பாடலுக்கு இசையமைத்தவருக்கும் தனியாக விருதுகள் வழங்கப்படும்.

9. எந்த இசைக்கருவியையும் பயன்படுத்தலாம். உங்கள் பாடலுக்கு தேவையான இசைக் கருவிகளை, தொழில்நுட்ப சாதனங்களை நீங்களே கொண்டுவர வேண்டும்.

மூன்று நடுவர்களுக்கும் பாடல்களை எழுத்தில் பிரதி பண்ணி வழங்க வேண்டும்.

போட்டியின் போது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| பாடும் திறன் | - 15 |
| லயம் | - 10 |
| இசையமைப்பு | - 10 |
| உச்சரிப்பு தெளிவு | - 10 |
| ஒத்திசைவு | - 10 |
| சுருதி பாவம் | - 10 |
| பாடல் வரிகள் | - 15 |
| ஆடை ஒப்பனை | - 10 |
| நிலை சமர்ப்பணம் | - 10 |
| மொத்தம் | - 100 புள்ளிகள் |



இப்போட்டிக்கான விண்ணப்பப்படிவங்கள் பங்குத்தந்தையர்களுக்கும், கன்னியர் இல்ல முதல்வர்களுக்கும் அனுப்பப்படும். பங்கெடுக்க விரும்புவோர் இவ்விண்ணப்ப படிவங்களைப் பூர்த்தி செய்து கார்த்திகை மாதம் 01ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். கடித உறையின் வலது பக்க மூலையில் "கரோல் பாடல் போட்டி விண்ணப்பம்" என்று குறிப்பிடவும். பாடலுக்கான பாடல் வரிகளை எழுதியவர் இசையமைத்தவர் பெயரையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடவும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் குழுக்களுக்கு " புனித சிசிலியா பாடகர் குழு விருது 2022" வழங்கப்படும்.

இப்போட்டிகள் அனைத்தும் கார்த்திகை மாதம் 26ம் திகதி சனிக்கிழமை காலை 09.00 – 01.00 மணி வரை கலையருவி மண்டபத்தில் நடைபெறும். இப் போட்டியின் போது ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் குழுக்கள் தெரிவு செய்யப்படும்

போட்டியில் பங்கெடுக்கும் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். (எனவே விணணப்பபடிவத்தில் பெயர்களை எழுதும் போது முழுப்பெயரை சரியாக எழுதவும்)

வெற்றியீட்டிய போட்டிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு தொலைக்காட்சிகளில் ("மாதாTV. இந்தியா, மடுமாதாTV Youtube, மன்னார் கத்தோலிக்க மீடியா பக்கம்) ஒளிபரப்பு செய்யப்படும்.

ஆண்டிறுதியில் கலையருவியில் நடைபெறும் கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்வின் போது கரோல், வில்லுப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

(பக் 7)

## நித்திய வாக்குத்தத்த நன்றித்திருப்பலி



17.09.2022 அன்று அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்த **அருட்சகோதரி ஆன்சிந்துஜா** அவர்களின் இறுதி அர்ப்பண நித்தியத்திற்கான நன்றித் திருப்பலியானது அளவக்கை புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் அருட்தந்தை ஜெயசீலன் அடிகளாரின் தலைமையில் நன்றித் திருப்பலியாக நடைபெற்றது. அருட்சசோதரியின் அர்ப்பணத்தினை மன்னா வாழ்த்தி வரவேற்கிறது.

## பங்கு மட்டத்திலான வில்லுப் பாடல் போட்டி – 2022

மன்னார் கலையருவியில் பங்கு மட்டத்திலான வில்லுப்பாடல் போட்டியானது "கிறிஸ்த்து பிறப்பு கூட்டொருங்கிய திருஅவையில்" எனும் மையப்பொருளில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பங்கில் இருந்தும் ஓர் குழு வீதம் கலந்து கொள்ள முடியும். ஒரு குழுவில் 07 – 15 பேர் கலந்து கொள்ளலாம். வயதெல்லை இல்லை. வில்லுப்பாடலானது 15 நிமிடங்களிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.போட்டி நடைபெறும் திகதியானது : கார்த்திகை மாதம் 26ம் திகதி போட்டி நடைபெறும் நேரம் :மாலை 2.00 மணி தொடக்கம்

தொடர்புகளுக்கு: 0232250789, 0773517707, 0763801841

## 25 வது வெள்ளிவிழா.......




வண. அருட்சகோதரர்
ச. சூசைப்பிள்ளை அண்ணாமலை

வண. அருட்சகோதரர் ச. சூசைப் பிள்ளை அண்ணாமலை திருவுளச்சபை அவர்களின் முதல் வாக்குத்தத்ததின் 25 ஆண்டு யூபிலியானது 17.09.2022 அன்று கட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. பணி சிறக்க மன்னா சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.


## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒரு வருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா- 1500.00 வெளிநாட்டுச் சந்தா 5000.00 ஆகும், மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தா முடிவடையும் முன்னதாக புதிப்பித்துக் கொள்ளுங்கள்

## வரவேற்கின்றோம்....

எமது மறைமாவட்டத்தில் பணியாற்றி கடந்த சில ஆண்டுகாலமாக உயர்கல்விக்காக கொரியா சென்று படிப்பை நிறைவு செய்து மறைமாவட்டம் திரும்பியுள்ள **அருட்பணி. ஞானராஜ் குரூஸ்** அடிகளாரை வாழ்த்தி வரவேற்கின்றோம் இவர் தற்போது மன்னார் மறைமாவட்ட காத்தான்குளப்பங்கிற்கு ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். மன்னா சார்பாக வாழ்த்துகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## இறுவட்டு வெளியீடு



24.09.2022 அன்று காலை 10.00 மணியளவில் கலையருவியின் மண்டபத்தில் அருட்சகோதரர் நீக்கிலஸ் லோகு அவர்களின் எழுத்தாக்கம் மற்றும் இசையமைப்பில் வாழ்க மன்னார்... மற்றும் அப்ப வடிவான.... ஆகிய பாடல்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப் பட்டன. இப் படைப்பினில் நாற்பதிற்கும் அதிகமான பாடகர்கள் பாடியுள்ளனர். சிறப்பாக வாழ்க மன்னார்... பாடலானது ஒளிப்பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குரு பிரதீபா விருது.......



2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த அதிபருக்கான "குரு பிரதீபா பிரபா" விருதைப் பெற்றுள்ள மன் நானாட்டான் டிலாசால் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர். S.C. விஜயதாசன் FSC அவர்கள் பணி சிறக்க மன்னா சார்பாக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம் அத்தோடு இறை ஆசீரும் வேண்டி நிற்கின்றோம்.

## முதல்நன்மை கொண்டாட்டம்

மடுறோட் பங்கு புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத்தில் 11.09.2022ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் சிறப்புத்திருப்பலியில் 07 சிறார்கள் முதல் முறையாக தம் ஆன்ம உணவாக கிறீஸ்துவைப் பெற்றுக்கொண்டனர். இத்திருப்பலியினை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நற்கருணைநாதர் சபை இல்லத்தின் அதிபரும், யாழ் குருமட விரிவுரையாளருமான அருட்பணி. C. கிறிஸ் தோப்பர்(S.S.S) அடிகளார் நிறை வேற்றினார்.



2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் திகதி யாழ் நூலகம் மற்றும் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற "தேசிய அமைதி விருது வழங்கும் விழாவில் நாட்டின் 25 மாவட்டங்களிலும் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டவர்களில் முதன்மையானவர்களை தேர்ந்தெடுத்து கௌரவிக்கும் வகைகளின் கீழ் "தேசிய அமைதி" விருதை வழங்கி இருந்தனர்.



## சமாதான தூதுவர்

இந்த விருதுக்காக மன்னார் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட C. தயாளராஜன் அவர்களுக்கு இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாணம் கௌரவ ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் அவர்களால் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மன்னா சர்பாக வாழ்த்துகிறோம் வளர்க இவரதுபணி

## மறைபரப்பு ஞாயிறு சிறப்பு நிகழ்வுகள்

செபத்தாலும், வாழ்வினாலும், நிதியுதவியினாலும் மறையைப் பரப்புதல். திருப்பலி: முன்னுரை, வாசகங்கள், மறையுரை, மன்றாட்டுகள் அனைத்தும் மறைபரப்பு பணியை

மையப்படுத்தியதாக இருத்தல்.

இறைவார்த்தையை காட்சிப்படுத்தல் - வருகைப்பவனியில் திருப்பாலத ்துவசபை மாணவர்களை

கொண்டு செயற்படுத்தலாம்

உதாரணம்: நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத் 28:19)

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல ்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்16:15)

தி.பா 1:8, மாற் 6:7, லூக் 10:1-2, 1கொரி 9:16 கண்காட்சி:

01. மறைபரப்பு என்றால் என்ன?

02. மறைபரப்பு பணியின் பாதுகாவலர்களைப் பற்றிய விளக்கம் காட்சிப்படுத்தல்.

புனித பிரான்சிஸ்கு சவேரியார்? குழந்தையேசுவின் புனித சின்னத்திரேசா

03. முற்காலத்தில் மறை அறிவிப்பு பணி:

இறைவாக்கினர்களின் மறைபரப்பு

திருத ்தூதர்களின் மறை அறிவிப்பு

நற்செய்தியாளர்களின் மறை அறிவிப்பு

தூய பவுலின் மறை அறிவிப்பு

எமக்கு தெரிந்த பரீட்சையமான புனிதர்களின் மறை அறிவிப்பு பணிகள்.

உ+ம் புனித யோசப்வாஸ், புனித அன்னை திரேசா (மாணவர்களை புனிதர்களை போல

அலங்கரித்து, அவர்களை கொண்டே அப்புனிதர்களை பற்றி எடுத்து கூறுவது, அவர்கள் வாழ்வில் முக்கியமான சம்பவங்களை நடித ்து காட்டுதல்

04. தற்காலத்தில் மறை அறிவிப்பு பணி: குருக்கள், துறவியர், பொதுநிலைப்பணியாளர்கள் திருஅவைமறை கல்வி ஆசிரியர்கள் மாணவர்கள்

மறைபரப்பு ஞாயிறு மாலையில் கலைநிகழ்வுகள் பங்குச் சமூகம் , அன்பியம் , குடும்பம் தனிநபர்

05. உவமைகள் வாயிலாக. உருவப் படங்களை காட்சிப்படுத்தல்

உதாரணம்: விதைப்பவன் உவமை (வார்த்தை, படம், சிறிய விளக்கம்)

06. திருவழிபாடு திருப்பலி, திருவருட் சாதனங்கள்

07. மறைபரப்புப் பணியில் ஏற்படும் சவால்கள்

08. சவால்களை பணிகளாக மாற் றிக்கொள்ள தேவையான முயற்சிகள்.

செபம், நட்புறவு, சமூக ஒன்றிப்பு

09. இறுதியாக நீர் காட்டும் பாதையில் நாம் சென்று நீர் சொல்லும் வார்த்தையை மறைபணியாக்கிட இதோ நாம் வருகிறோம் என்று இயேசு வின் சாட்சிகளாய் நாம் ஒவ்வொருவரும் நம் வாழ ்வாலும் வார்த்தையாலும் நற்செய் திப் பணியாளர்களாக மாறிடுவோம்.

மறைபரப ்பிற்கான நிதி சேகரித்தல்:

மறைபரப்பு சந்தை

மறைபரப்பு பற்றிய கண்காட்சி

மறைபரப்பு விளையாட்டுக்கள்

திருப்பாலத ்துவசபை மாணவர்கள் ஊடாக நிதி சேகரித்தல் மறை பரப்பு ஞாயிறு திருப்பலி காணிக்கை

ஏனைய தனிநபர், குடும்பம், பொது அமைப்புக்கள் அன்பளிப்பு மறைபரப்பு பற்றிய கலை நிகழ்வுகள் நடாத்தல்:

மறைபரப்பு பற்றிய விளையாட்டுக்கள் (திருப்பால த்துவசபை மறைக்கல்வி மாண வர்களுக்கு)

இறைவார்த்தை பற்றிய சொற்றொடர் போட்டிஇறைவார்த்தையின் உவமைகளை மையப்படுத்தல் ்மறைபரப்பு பற்றிய வினாவிடைப் போட்டிமாணவர்களுக்கு நடாத துதல். மறையாசிரியர்களுக்கு, திருப் பாலத ்துவசபை ஊக்குவிப் பாளர்களுக்கு நடாத்துதல். இளைஞர்களுக்கு நடாத்துதல். வளர்ந்தவர்களுக்கு நடாத்துதல்.

*அருட்தந்தை தயாளன் கூஞ்ஞ*
*இயக்குனர் அன்பியம்,*
*பாப்பிறை*

## இலங்கையில் காற்றாலை திட்டத்தை எதிர்க்கும் மக்கள்



இலங்கையின் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்படும் கனிய வள மண் அகழ்வு மற்றும் உயர் வலுக் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு இந்த எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்திருந்தது. மன்னார் மாவட்ட மக்கள், மீனவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் என பலரும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டிருந்தனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், மன்னார் நகர் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன், தனியார் பேருந்து போக்குவரத்து நடவடிக்கைகளும் இடை நிறுத்தப்பட்டிந்தன.

கனியமணல் அகழ்வு காரணமாக மன்னார் தீவு பகுதியில் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும், காற்றாலை மின் உற்பத்தி திட்டம் காரணமாக எதிர்காலத்தில் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் கோரியே இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த இரண்டு திட்டங்களையும் உடனடியாக மன்னார் தீவு பகுதியில் நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்து, எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பியிருந்தனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பெண்ணொருவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார். இந்த இடத்தில் இவ்வளவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். எதற்காக?

தீவை நாசப்படுத்துவதற்கு அபிவிருத்திகளை காட்டி, எங்களை ஏமாற்றி மண் வளம் நாசமாகிக் கொண்டு போகின்றது. காலப் போக்கில் இந்த தீவு அழிந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் இருப்போமோ தெரியாது.

எங்களுடைய தீவு விற்கப்படுகின்றது. எங்களுடைய தீவை இழப்பதற்கு நாங்கள் விட மாட்டோம். மண் அகழ்விலிருந்தும், காற்றா லை திட்டத்திலிருந்தும் விடுபடத்தக்கதாக எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். தீர்வை காணாமல் இந்த இடத்தை விட்டு நாங்கள் போக மாட்டோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்ணொருவர் கருத்துதெரிவித்தார்.

எங்களுடைய மன்னார் மாவட்டத்தில் காற்றாலை அமைக்கின்ற மையினால், ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து நாங்கள் பல இடங்களில் பல தடவைகள் சொல்லியிருக்கின்றோம்.

ஆனால் மீண்டும் அது பற்றிய பேச்சுக்கள் நடந்துக்கொண்டிருக்கின்றது. எங்களுடைய கரைவலைப்பாடு இடங்களில் இந்த காற்றாலைமின்சாரம் அமைக்கின்ற மையினால், எங்களுடைய 7 தொடக்கம் 10 கிலோமீற்றர் இடம் பறி போகின்றது. எங்களுடைய தொழிலுக்கும் இடைஞ்சலாக இருக்கின்றது. எங்களுடைய தொழிலை முடக்குகின்ற செயற்பாடாகவே நாங்கள் இதனை பார்க்கின்றோம். ஆர்ப்பாட்டத்தில் கலந்துக்கொண்ட ஒருவர் குறிப்பிட்டார். இதேவேளை, இந்த எதிர்ப்பு நடவடிக்கையின் போது, பொதுமக்கள் கையெழுத்து பெறும் நடவடிக்கையொன்றை ஆரம்பித்திருந்தனர்.

அரசாங்க அதிபரிடம் கோரிக்கை மனு கனியவள மண் அகழ்வு மற்றும் உயர் மின்வலுக் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றுக்கொள்ளப்பட்ட கையெழுத்துடனான மகஜரொன்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கான அதிகாரம் தனக்கு இல்லாமையினால், இது தொடர்பில் தான் மேலிடத்திற்கு அறிவிப்பதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். மக்களினால் கையளிக்கப்பட்ட இந்த மகஜரை, தான் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

வடக்கின் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை, இந்தியாவிற்கு சொந்தமான அதானி நிறுவனத்திற்கு வழங்க இலங்கை அரசாங்கம் கடந்த 16ஆம் தேதி தீர்மானித்திருந்தது. இலங்கையின் வட பகுதியிலுள்ள மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி

திட்டத்தை முன்னெடுப்பதற்கு அதானி நிறுவனத்திற்கு அனுமதியை வழங்க இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது.

## மன்னார் பொது வைத்தியசாலை திருவிழா



20.08.2022 அன்று புனித ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா மன்னார் மறைமாவட்ட பொது வைத்தியசாலையில் மன்னார் மறைவாட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடை பெற்றது.

## வவுனியா சிவபுரம் புனித யாகப்பர் ஆலயத்திருவிழா நிகழ்வு



வவுனியா சிவபுரம் புனித யாகப்பர் ஆலயம் மீண்டும் புதிய கட்டுமானப் பணிகளோடும், திருத்தங்களோடும், புதிதாக வடிவமைக்கப்பட்டு திருவிழா ஆயத்தங்களும் முன் னெடுக்கப்பட்டு ஆலயம் மீண்டும் அர்ச்சிப்பு செய்யப் பட்டது, இவ்வாலயத்தை எமது மன்னார் மறை மாவட்ட திருவிழாத் திருப்பலியானது 18-09-2022 ஞாயிற்றுகிழமை காலை 7:30 மணியளவில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது

திருப்பலியினை எமது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P.கிறிஸ்நாயகம் அடிகளார் தலைமைதாங்கி நிறை வேற்றினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் பொழிந்தது அனைத்தும் நனைந்தது !

"தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா? வாழ்வை சுமையென நினைத்து தாயின் கனவை மிதிக்கலாமா?" என்னே அற்புதமான உயிரூட்டமான வரிகள், கவிஞனின் உள்ளத்திலே உதித்து , ஒலிவடிவம் பெற்று வானொலிகளிலே தவழ்ந்து அவனது செவிகளுள் அவ்வரிகள் நுழைந்தபோது மூளையில் மின்னல் பளிச்சிட்டது போன்ற உணர்வு இதுவரையிலே தோல்வியிலே துவண்டு கிடந்த அவன் இதயத்திலே புதுஇரத்தம் பாய, புதுமையாக துடிக்கின்றது அவன் இதயம் புத்துணர்வு பெற்ற அவன் மூளையிலே பதிந்திருந்த பழைய நினைவுகள் ஒலிநாடாவாக நீள்கின்றன. ஆம் நீண்ட காலங்களிற்கு பின் அவன் நினைவலைகள் மீட்டப்படுகின்றன.

தனது தாயாரின் புனிதமான உழைப்பினிலே பட்டதாரியாகியது இலங்கை நிர்வாக சேவை, கல்வி நிர்வாக சேவை போன்ற உயர் பரீட்சைகள் பலவற்றில் பல்வேறு கஸ்ரங்கள் மத்தியில் தோற்றியும் ஒரு புள்ளியினால் உயர் பதவிகள் மறுக்கப்பட்டது. பதவி ஆசை காட்டி அவனது தூய்மையான காதலுக்கு வேட்டு வைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள். இவையெல்லாவற்றையும் மாரி காலத்திலே இரைதேட மறந்து, வயிற்றிலுள்ளவற்றை மீண்டும் மீண்டும் இரைமீட்டிடும் ஆவினம் போல அவன் மூளை மீண்டும், மீண்டும் மீட்டி நிற்கின்றது. ஆயினும் அண்மையில் அவன் சந்தித்த துன்பம் மட்டும் சுற்றிச் சுற்றி வந்த அவனது சிந்தனையை குழப்பிக் கொண்டே இருக்கின்றது. நாடக வடிவில் பார்த்த விந்தனின் "துயரப்பாறை" இன்று அவனது வாழ்வில் நிஜப்பாறையாக மாறிய வடிவம் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. உயிருக்குயிராய் நேசித்தவர்கள் ஒரே தட்டிலே உணவுண்டவர்கள் நீயில்லையென்றால் நானும் இல்லையென்று உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டவர்கள் என்று அவன் உண்மையாக விசுவசித்தவர்களே தனக்கெதிராக தன்னை விழ்த்துவதற்காக திரை மறைவில் ஆடிய நாடகம் அவனால் ஜிரணிக்க முடியாததாக விளங்கியது.

அண்மையில் வந்திருந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை முடிவிலே ஒரு புள்ளியினால் தோல்வி கண்டிருந்தான். ஏற்கனவே இவ்வாறான பல தோல்விகளை சந்தித்திருந்த போதிலும் இத் தோல்வி உண்மையிலேயே அவனை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது. ஆயினும் இப் பரீட்சையிலே இவனைப் போன்று ஒரு புள்ளியினால் தோல்வி யடைந்திருந்தவர்களையும் வெற்றிடமாகவுள்ள வடக்கு, கிழக்கு மாகாண கல்வி வலயக்கல்வி நிர்வாக சேவை பதவிகளுக்கு பணிநிறைவேற்ற அதிகாரிகள் எனும் மாகாண செயலாளரின் உத்தரவும் அதனைத் தொடர்ந்து அவனுக்கு கிடைத்த கோட்டக்கல்வி அதிகாரிப் பதவியும் அவனுக்கு சற்று ஆறுதலைத் தந்த போதிலும் அதுவே பல மனித உள்ளங்களை உண்மையாக இனங்காணக்கூடிய நிகழ்வாகவும் அமைந்தது. "ஒரு புள்ளியினால் தோல்வி கண்டாலும் தோல்வி தோல்வி தானே! ஒரு புள்ளி குறைந்தால் பல்கலைக்கழகம் போகமுடியுமா? இவனுக்கு மட்டும் ஏன் இந்தச் சலுகை இவனை விடக்கூடாது எனும் சாரப்பட அப்பப்பா... எத்தனை புகார்கள், மொட்டைக் கடிதங்கள், பெட்டிஷங்கள்!...........!

இவையாவும் உயரதிகாரியை சங்கடத்திற்குள்ளாக்கியதுடன் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல ஏற்கனவே நொந்து போயிருந்த அவன் உள்ளத்தை நொருக்கி விட்டது. ஏழு மாதங்களாக அவன் திறமையாக நிர்வகித்து வந்த அவனது கோட்டக்கல்வி அதிகாரி பதவி எதுவித காரணம் கூறப்படாமல் அவனிடமிருந்து கைமாற்றப்பட்டது. அவனை சம்மட்டி கொடுத்து தாங்கியதைப் போன்றிருந்தது. ஓ பதவியே ! உன்னைப் பற்றிய ஆசை எவ்வளவு பயங்கரமான வேலைகளையெல்லாம் செய்கிறது. பார்தாயா? உண்ட வீட்டிற்கே இரண்டகம் , கூட நடந்தவனுக்கே குழிபறிப்பு . குமுறிக்குமுறி அழுகிறான் அந்த அழுகையின் மத்தியில் ஆழ்ந்த தீர்மானம் ஒன்று அவன் உள்ளத்திலே உதயமாகின்றது. ஆம் இந்த சுயநலவாதிகள் மத்தியில் இனி ஒருநிமிடம் தானும் இருக்ககூடாது.

எண்ணிப்பார்க்க முடியாத கஸ்ரங்கள் காணப்படுகின்ற பொதிலும் வன்னிப் பிரதேசத்திற்கு சென்று விடுவது, அங்குள்ள மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வது. உறுதியாக எடுக்கப்பட்டு நிறைவேறிய அவனது தீர்மானம் இன்று அவனை வன்னியில் ஒரு கல்வி அதிகாரியாக பணிநிறைவேற்ற வைத்திருக்கின்றது.

"அப்பச்சி ஸ்கூல் விசிற் போக வேண்டாமா? என்ன சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீங்க.. நேரம் போகிறது தன்னை வன்னியில் தாயாக இருந்த கவனித்து கொள்ளும் மகள் ஜெனிற்றாவின் குரல் அவனை மீண்டும் உண்மை உலகிற்கு கொண்டு வருகிறது.

"ஓம் அம்மா மறந்த போய்விட்டன் " தன்னை சுதாகரித்துக் கொண்டு வேகமாக புறப்படுகின்றான். "அப்பச்சி மழைவரும் போலிருக்கு குடை எடுத்துக் கொண்டு போங்கோ மகளின் குரல் செவியில் விழுந்ததும் உள்ளுர அவனுள் ஒரு நகைப்பு வன்னியில் வாழுகின்ற மக்களுக்கு வானமே குடையாக விளங்கும் போது அவனுக்கு மட்டும் குடையா? ஆம் என்ன

**திரு . ஜோசப் ஆரோக்கியம் குரூஸ்**

**ஓய்வு நிலை பிரதிக் கல்விபணிப்பாளர்**
**வங்காலை**

விசித்திரமான உலகம் புது திசையில் எங்கோ போய்க்கொண்டிருக்க வன்னி மட்டும் எதிர்த்திசையில் சிதையை நோக்கி போய்க்கொண்டிருக்கின்றதா? இங்கு காலடி எடுத்து வைத்த நாள் முதல் அவனது இத்யத்திலே இந்த ஓலம் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது..

மடுமாதாவின் பாதத்திலே பயபக்தியாக கூடியிருக்கும் பக்தர்களாக மரங்களுக்கு இடையே கால்பரப்பி மண்டியிட்டிருக்கும் குழுக்கள் எந்த மரத்திற்கு கீழே எந்த பாடசாலையென இனங்காண்பதற்கு ஏராளமான (பக் 07)

நேரம் எடுக்கும் கடினமான நிலை. நிலத்திலே இருந்தவராக துள்ளிக்குதிக்கும் மாணவனுக்கு உண்ணி கடித்ததா? எறும்பு கடித்ததா தேள் கொட்டியதா என அனுமானிக்க முடியாத அவல நிலை. பல காலங்களாக மூச்சடக்கித் தேடி முத்தினைக் கண்டவன் நிலை போல

## குப்பைத் தொட்டியில் ஒரு பாடம்



ஒருவன் தன்னுடைய தொழிலில் தோல்வி நிலையில் தான் வந்த வழியில் தெருமுனையில் வருவோர் போவோரை மிகுந்த மன வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். எதிரில் ஒருவர் குப்பைத் தொட்டியில் தனக்கு தேவையான பழைய பேப்பரை ஒரு சாக்கில் நிரப்பிச் சென்றார். கொஞ்ச நேரத்தில் இன்னொரு நபர் குப்பைத் தொட்டியில் தனக்கு தேவையான பழைய பிளாஸ்ரிக் தட்டுப் பேப்பரை எடுத்து சாக்கில் நிரப்பிச் சென்றார். அதன் பின் ஒரு நாய் வந்து எச்சில் இலையில் இருந்த உணவை சாப்பிட்டு சென்றது. கடைசியில் வந்த ஒரு பசு குப்பையில் கிடந்த பச்சிலையை உண்டு தன் பசியை போக்கியது. இதைப் பார்த்து படு தோல்வியடைந்த அவர் கூறிய வார்த்தைகள் "ஒரு குப்பைத் தொட்டியில் இத்தனைபேர் பிழைத்து வாழ்கின்றார்கள் என்றால் இந்த பரந்து விரிந்து கிடக்கும் இவ்வுலகில் நாம்

**அகுஸ்தின் திரேசா –முருங்கன் பிட்டி**

அனைவரும் எப்படியெல்லாம் பிழைத்து வாழலாம்" என்று தனது மனதை திடப்படுத்தி விட்டு இனி எனக்கு தோல்வியே கிடையாது இனி வரும் காலங்கள் பொற்காலமே மிகப் பெரிய வெற்றியே என தன்னம்பிக்கையுடன் தன் பழைய தொழிலை தொடங்கச் சென்றான்.

# மரியாளின் வியாகுலங்கள்

நிகழ்வு

மைக்கேல் ஆஞ்சலோ என்ற கலைஞன் வடித்த மிகவும் தத்வரூபமான ஒரு சிற்பம்தான் 'Pieta' என்பதாகும். இந்த சிற்பத்தில் இயேசுவின் இறந்த உடலை தாய் மரியா தன்னுடைய மடியில் வைத்திருப்பார். இந்த சிற்பத்தை அவர் வடிவமைத்து விட்டு, மக்களுடைய பார்வைக்கு அதனை வைத்தார். அதைப் பார்த்த அதிகமானோர் பாராட்டிச் சென்றார்கள். ஒரு சிலர் சிற்பத்தில் மரியாவின் முகத்தில் இயேசுவை இழந்த கவலை தெரியவில்லை, அவர் மிகவும் இளமையாக இருப்பது போன்று தெரிகின்றார் என்று விமர்சனம் செய்தார்கள். அவர்களுடைய விமர்சனத்தைக் கேட்டுக்கொண்ட மைக்கேல் ஆஞ்சலோ இவ்வாறு பதில் சொன்னார்: "மரியாவின் முகத்தில் துக்கமோ, வேதனையோ தெரியாமல் இருப்பதற்குக் காரணம், அவர் இயேசுவின் இழப்பினால், துக்கப்படவில்லை என்று அர்த்தம் கிடையாது. மாறாக "தன்னுடைய மகன் உயிர்த்தெழுவார்" என்ற எதிர்நோக்கோடு இருந்தார். அதனால் தான் அவருடைய முகத்தில் துக்கமோ, வேதனையோ தெரியவில்லை. மேலும் மரியா இளமைத் தோற்றத்தோடு இருப்பதற்குக் காரணம், அவருடைய தூய்மையும் மாசற்றதன்மையுமே ஆகும். அவையே மரியாவை இளமையோடு இருக்கச் செய்தது.

இவ்வாறு அவர் பதில் கூறியபின் சிற்பத்தை விமர்சனம் செய்தவர்கள் அமைதியாகச் சென்றார்கள்.

### வரலாற்றுப் பின்னணி

வியாகுல அன்னையின் விழா பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடப்பட்டு வந்ததற்கான வரலாற்றுக்காரணம் இருக்கின்றது. 1221 ஆம் ஆண்டு ஸ்கூனன் (Schonan) என்ற இடத்தில் வியாகுல அன்னைக்கென்று பீடம் ஒன்று எழுப்பப்பட்டது. அதன்பிறகு வியாகுல அன்னையின் பக்தி முயற்சிகளை "சர்வைட்ஸ்" சபையார் வளர்த்தெடுத்தனர். 1727 ஆம் ஆண்டு அப்போது திருத்தந்தையாக இருந்த பதிமூன்றாம் பெனடிக்ட் வியாகுல அன்னையின் விழாவை உலகம் முழுவதும் கொண்டாடப் பணித்தார். 1913 ஆம் ஆண்டு, திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் இவ்விழாவை ஒவ்வொரு ஆண்டும் செப்ரம்பர் 15 ஆம் நாள், அதாவது திருச்சிலுவை மகிமை விழாவிற்கு அடுத்த நாளில் கொண்டாடப் பணித்தார். இவ்வாறு தோன்றியது தான் வியாகுல அன்னையின் பெருவிழாவாகும்.

### மரியாவின் ஏழு வியாகுலங்கள்

மரியா, வானத்தூதர் கபிரியேலின் வார்த்தைகளுக்கு ஆம் எனச்சொல்லி, இறைவனின் திருவுளத்திற்கு பணிந்து நடக்கத் தொடங்கியதிலிருந்து, இறந்த இயேசுவை அடக்கம் செய்தது வரை அனுபவித்த வியாகுலங்கள் துன்பங்கள் ஏராளம். ஆனாலும் திருச்சபை மரியாவின் வியாகுலங்கள் ஏழு என்று மட்டும் பட்டியலிட்டிருக்கிறது. எனவே, அவை என்னென்ன என்று சிந்தித்துப் பார்ப்போம்.

*சிமியோனின் இறைவாக்கு (லூக் 2:25-35)*

மரியாவும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையுமான யோசேப்பும் குழந்தை இயேசுவை எருசலேம் திருக்கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கச் சென்றபோது அங்கிருந்த சிமியோன் குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தி, "இதோ இக்குழந்தை இஸ்ராயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கும். இவ்வாறு பலருடைய எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2:34-35) என்று மரியாவிடம் சொல்லுகிறார். சிமியோனின் இவ்வார்த்தைகள் மரியாவின் உள்ளத்தில் மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தியிருக்கும். ஏனென்றால், இயேசுவின் தாயாக இருப்பதால் துன்பங்கள் வரலாம் என மரியாவுக்கு தெரிந்திருக்கும். ஆனால் அது இவ்வளவு விரைவாக வரும் என்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

*குழந்தையைத் தூக்கிக்கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடுதல் (மத் 2:13-14)*

ஞானிகள் தன்னை ஏமாற்றிவிட்டதை அறிந்த கொடுங்கோலன் ஏரோது குழந்தை இயேசுவைக் கொல்வதற்குக் கட்டளையிடுகின்றான். இதனை கனவின் மூலமாகத் தெரிந்துகொண்ட யோசேப்பு மரியாவையும் குழந்தை இயேசுவையும் தூக்கிக்கொண்டு எகிப்துக்கு ஓடுகிறார். பெத்லகேமிலிருந்து எகிப்து 600 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அவ்வளவு தூரத்தையும் பயத்தோடும், வேதனையோடும் கழித்த மரியாவிற்கு இது ஒரு வியாகுலம்தான்.

*சிறுவன் இயேசு கோவிலில் காணாமல் போதல் (லூக் 2:43- 47)*

தூய அல்போன்ஸ் லிகோரி கூறுவார், "மரியா அடைந்த வியாகுலங்களில் மிகவும் கொடியது இயேசு எருசலேம் திருக்கோவிலில் காணாமல் போனதுதான். ஏனென்றால் மற்ற வியாகுலங்களில் இயேசு மரியாவோடு உடன் இருப்பார். இதில் இயேசு மரியாவோடு இல்லை. தான் ஏதாவது தவறு செய்துவிட்டோமோ, அதனால்தான் இயேசு தன்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டாரோ என மரியா நினைத்திருக்கக் கூடும். அது அவருக்கு மிகப்பெரிய வியாகுலமாக இருந்திருக்கும்". தூய லிகோரி சொன்னது முற்றிலும் உண்மை. இயேசு கோவிலில் காணாமல் போனது மரியாவிற்கு மிகப்பெரிய வியாகுலம்தான்.

*இயேசு சிலுவை சுமந்து செல்லுதல் (லூக் 23:27)*

கள்வர்களுக்கும் நாட்டைக் காட்டிக்கொடுத்தவர்களுக்கும் கொடுக்கப்படும் சிலுவைச் சாவு, ஒரு பாவமும் அறியாத தன்னுடைய மகனுக்குக் கொடுக்கப்பட்டதை நினைத்து மரியா மிகுந்த வேதனை அடைந்திருக்கலாம். அது அவருக்கு மிகப்பெரிய வியாகுலமாக அமைந்திருக்கும்.

*சிலுவையின் அடியில் துணை நின்றது (யோவா 19:41,42)*

ஒரு குற்றவாளியைப் போன்று சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் தன் மகன் இயேசுவைப் பார்ப்பதற்கு மரியாவிற்கு வேதனையிலும் வேதனையாக இருந்திருக்கும். மூன்று ஆண்டுகள் உடனிருந்து இயேசு செய்த அற்புதங்களையும் அதிசயங்களையும் பார்த்த சீடர்கள் ஓடிப்போனது, இயேசுவிடமிருந்து எவ்வளவோ நன்மைகளையும் நலன்களையும் பெற்றுக்கொண்ட மக்கள் அவரைக் கை நெகிழ்ந்தது இவற்றோடு சேர்த்து, தன் மகன் இப்படி வானத்திற்கும் பூமிக்கும் இடையில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறாரே என்று மரியா மிகுந்த வேதனை அடைந்திருப்பார். அது அவருக்கு பெரிய வியாகுலமாக இருந்திருக்கும்.

*இறந்த இயேசுவின் உடலை மடியில் கிடத்திவைத்தல் (யோவா 19: 40)*

எருசலேம் திருக்கோவிலில் தன்னுடைய மகனைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த போது சிமியோன் சொன்ன "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்" என்ற வாக்கு இங்கே நிறைவேறிவிட்டதை நினைத்து மரியா பெரிதும் வேதனைப் பட்டிருக்கக்கூடும். இறந்த மகனின் உடலை இப்படியா சுமந்திருப்பது என்று மரியாவிற்கு இந்நிகழ்வு பெரிய வியாகுலமாகவே இருந்திருக்கும்.

*இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தல் (யோவா 19: 41-42)*

இறந்த பெற்றோர்களை பிள்ளை அடக்கம் செய்யும் நிலைமாறி, இங்கே இறந்த தன்னுடைய மகனை தாயாகிய மரியா அடக்கம் செய்கிறார். உலகத்தில் இதைவிட கொடுமை என்ன இருந்திருக்கும்?. மரியா தனக்கு ஏற்பட்ட இப்படிப்பட்ட ஒரு வியாகுலத்தை பொறுமையோடு ஏற்றுக் கொள்கிறார் எல்லாவற்றையும் இறைத் திருவுளமென தாழ்மையோடு ஏற்றுக் கொள்கிறார். மரியாவைப் பொறுத்தளவில் பாடுகள் தான் விண்ணகத்திற்கான நுழை வாயில் என்பது ஆழமான விசுவாசமாக இருந்திருக்கும். அதனால் அவர் எல்லாத் துன்பங்களையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டார்.

### கற்றுக்கொள்ளவேண்டிய பாடம்

வியாகுல அன்னையின் விழாவைக் கொண்டாடும் இன்று, இவ்விழா நமக்கு உணர்த்தும் செய்தி என்ன சிந்தித்துப் பார்த்து நிறைவு செய்வோம்.

மரி(அன்னை)யைப் போன்று துன்பங்களை ஏற்போம், அன்னைக்காக துன்பங்களை ஏற்போம் மரியா, (பக் 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இயற்கை சூழலை பாதுகாப்பதற்கான படிக்கல்



இத்திட்டமானது ' கறிற்றாஸ்-இலங்கையின் தேசிய திட்டமாகவுள்ளதோடு மிகவும் சிறப்பாக திட்ட வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டு இலங்கையின் 13 மறைமாவட்ட நிலையங்கள் ஊடாகவும் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான நிதியினை ஜேர்மன் நாட்டின் கத்தோலிக்க அமைப்பாகிய Misereor அமைப்பு மேற்கொண்டு வருகின்றது. மன்னார் மறைமாவட்ட சமூக பொருளா தார ஆணைக்குழுவாகிய கறிற்ராஸ் - வாழ்வுதயத்தினால், இதற்கான திட்ட இணைப்பாளர், வெளிக்கள பணியாளர் களை கொண்டு இத்திட்டம் சிறப்பாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினைப் பற்றியும், இதன் செயற்பாடுகள் பற்றியும், மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மக்கள் எவ்வாறாக சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஈடுபடலாம் என்கின்ற விடயங்களையும் தொடர்ந்து வரும் மன்னா பத்திரிகையின் ஊடாக பார்க்கலாம்.

## இத்திட்டத்தின் நோக்கு இலக்கு



எமது திருத்தந்தையின் சிந்தனையில் உருவான **"இயற்கையினை பாதுகாப்பது"** என்கின்ற மையப்பொருளினை அடிப்படைடை யாகக்கொண்டு Misereor நிதியுதவியுடன் மேற்படி திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

**திட்ட இணைப்பாளர் (IHD)**
**சு.அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
**கறிற்றாஸ்–வாழ்வுதயம்**
**மன்னார்**

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது மன்னார், மடு, மாந்தைமேற்கு, நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 07 இலக்கு கிராமங்களாகிய கீரி, தம்பனைக்குளம், மடுறோட், பாலைப்பெருமாள்கட்டு, காத்தான்குளம், மடுக்கரை, வேப்பங்குளம் ஆகிய கிராமங்களில் சூழல் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள் இலக்கு கிராம மக்களின் ஒத்துழைப்புடனும், அரச அதிகாரிகளின் வழிகாட்டலிலும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சூழல் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கம்

இலக்கு கிராமங்களில் உள்ள சூழலையும், இயற்கை வளங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் வளர்ந்தோர் சூழல் பாதுகாப்பு குழு, இளையோர் சூழல் பாதுகாப்புக் குழு, சிறுவர் பாதுகாப்புக் குழு என்பன உருவாக்கப்பட்டு அவர்களுக்கான சூழல்சார் விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப்பட்டுள் ளது. அவர்களின் பொறுப்புகள் கடமைகள் நன்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இவர்கள் கூட்டங்களை நடாத்துவதும், சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளாக மரம் நடுகை, குடிநீர் வசதி என்பவற்றை ஏற்பாடு செய்வதும் சிறப்பு அம்சமாகும். குறிப்பாக, கீரி கடற்கரை, வேப்பங்குளம் பள்ளிவாசல், மடுறோட் தேவாலயம், தம்பனைக்குளம் பாடசாலை, பாலப்பெருமாள்கட்டு இந்துக்கோவில் என்பவற்றின் இக்குழுக்கள் துப்பரவுப் பணிகளைச் செய்துள்ளதுடன் மரங்களையும் வளர்த்துவரு கின்றமை பாராட்டிற்குரியதாகும். இத்திட்டத்தின் பங்குதாரர்களாக கிராம அலுவர்கள், பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையினர், பிரதேசசபை, நகரசபை, வனவள பாதுகாப்பு திணைக்களம், சமயத்தலை வர்கள் போன்றோர் இச் செயற்பாட்டிற்கு பூரணமான

## செயற்றிட்டத்தின் பங்குதாரர்கள்



ஒத்துழைப்பினை வழங்கி வருவதோடு இவர்களின் அனுமதிகளும் முழுமையாக கிடைக்கப்பெறுவ தோடு, மேற்படி பங்குதாரர்களின்கீழ் உள்ள மக்கள் அமைப்பினர் இத்திட்டத்தின் இலக்கு குழுக்களுடன் இணைந்து செயற்படுவதானது இத்திட்டம் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பது திண்ணம்.

மேற்படி இலக்கு கிராமங்களில் சுற்றுசூழல் பாதுகாப்பினை மேற்கொள்வதற்காக சில இலக்கு பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. குறிப்பாக கடற்கரை பிரதேசங்கள், மண் அகழ்வு மேற்கொள்ளும் இடங்கள், புனிதஸ்தலங்களில் மக்கள் ஒன்றுகூடும் இடங்கள், பாடசாலைகள், பொது மைதானங்கள், மக்கள் ஒன்றுகூடும் ஏனைய பகுதிகள் போன்றவைகள் அடையாளம் காணப்பட்டு அரச அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் சிறப்பாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் முன்னெடுக்கப்ப டுகின்றது.

## மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்



சூழல் மேம்பாட்டினை இலக்காகக் கொண்டு இத்திட்டத்தின் செயற்பாடுகள் யாவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, சூழல் பாதுகாப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்ட அவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்வுகளும் செய்யப்பட்டுன்ளன. பல கிராமங்களில் பாதுகாப்புக் குழுக்கள் ஊடாக மக்களிற்கு விழ்ப்பூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் பயன்தரும் மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன. மேலும், கடற்கரை பிரதேசங்களை பாதுகாப்பதோடு அழகுபடுத்தல், அத்துமீறிய மண் அகழ்விற்கு எதிராக குரல் கொடுத்தல், மக்களை ஒன்றுதிரட்டி பொதுச்சிரமதானத்தில் ஈடுபடல், வீட்டுக்கழிவுகளை இயற்கை பசளையாக்குதல், பாரம்பரிய விதையுற்பத்திகளை ஊக்கப்படுத்தல் போன்ற விழிப்பூட்டல்கள் நடாத்தப்பட்டுள்ளன. திறமையான, அனுபவம் மிகுந்த வளவாளர்களை கொண்டு வீட்டுத்தோட்டம், இயற்கை வேளாண்மை, சேதனப் பசனை உற்பத்தி, விதை உற்பத்தி, நிதி முகாமைத்துவம் முதலான பயிற்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன. இவற்றோடு, இலக்கு குழுக்கள் வீட்டுத்தோட்டத்தினை மேற்கொள்வதற் கான ஊக்குவிப்புக்களை வழங்குவதோடு, பயனாளிகள் உற்பத்திசெய்யும் மரக்கறிகள், விதைகள், நாற்றுக்கள், இயற்கை உரம் என்பவற்றை மக்கள் இலகுவாக விற்பனை செய்வதற்கான சந்தைவாய்ப்பி னை வழங்கல். அத்தோடு ஊடகங்கள் ஊடாக சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்பூட்டல்களை மக்க ளிற்கு வழங்குவதோடு இலக்கு குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான பல்வேறு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

# மரம் வளர்ப்போம் மழைபெறுவோம்

குடிநீர் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் தம்பனைக்குளம் கிராம மக்களுக்காக வும், பாடசாலை மாணவர்களுக்காகவும் குடிநீர் சுத்திகரிப்பு மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி குன்றிய மடுக்கரை கிராம மக்களுக் காக நன்னீர் கிணறு ஒன்று புனரமைக் கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

## கீரிக் கடற்கரை சுத்திகரிப்பு நிகழ்வு



இலக்கு கிராமங்களில் மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் பிரதேசங்களை இனம்கண்டு கிராம மக்களை இலக்கு குழுக்கள் மூலமாக ஒன்று திரட்டி பொதுச்சிரமதான செயற்பாடுகளை முன்னெடுத்து சுற்று சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தி வருகின்றனர். குறிப்பாக இத்திட்டத்தின் இலக்கு கிராமங்களில் ஒன்றாகிய மன்னார் நகரசபைக்குட்பட்ட கீரி கிராமத்தில் உள்ள கடற்கரையில் சுற்றுலாத்துறையினரின் வரவினை அதிகரிப்பதற்கும் அத்தோடு கடற்கரை பிரதேசம் மாசடைவதை தடுப்பதற்குமாக

கறிற்ராஸ்-வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி செ.அன்ரன் அடிகளாரின் பணிப்பின் பேரில் திட்ட முகாமையாளர் யேசுதாசன் அவர்களின் வழிநடத்துதலில் மக்களை ஒன்று சேர்த்து மாபெரும் சுத்திகரிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதற்காக மன்னார் நகர சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் ஊழியர்களின் புரணமான ஆதரவோடும் கீரி கிராமத்தின் உள்ளூர் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்போடும் மக்கள் ஒவ்வொரு சமூகமட்ட அமைப்பு ரீதியாக தன்னார்வத்துடன் வருகைதந்து இவ் மாபெரும் கடற்கரை சுத்திகரிப்பு செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

இவ்வாறாக இத்திட்டத்தின் பணிகள் மேற்படி 7இலக்கு கிராமங்களிலும் முன்னெடுக்கப்படுவதோடு பொதுவாக ஊடக ரீதியாகவும் சுற்றுச்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

---

**வியாகுலங்கள்....**

இயேசுவுக்காக, இறைவனின் மீட்புத் திட்டம் நிறைவேறுவதற்காக எவ்வளவோ துன்பங்களை, வியாகுலங்களை அனுபவித் தார். அவரைப் போன்று நாமும் இறைவனின் திருவுளம் இந்த மண்ணில் நிறைவேற வேண்டும் என்பதற்காக துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் இவ்விழா உணர்த்தும் முக்கியமான செய்தியாக இருக்கின்றது. நற்செய்தியில் ஆண்டவர் இயேசு கூறுவார், "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்று (மத் 16:24). இயேசுவின் இவ்வார்த்தைகளுக்கு இணங்க மரியா இயேசுவுக்காக, இறைத்திருவுளம் நிறைவேறு வதற்காக எவ்வளவோ துன்பங்களை அனுபவித்தார். அவரைப் போன்று நாமும் இயேசுவுக்காகத் துன்பங்களை ஏற்கத் தயாராக இருக்கின்றோமா என சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல், நம்முடைய அன்னையர்களுக்காக நாம் துன்பங்களை ஏற்கவும் தியாகங்களை மேற்கொள்ளவும் துணிந்திருக்கின்றோமா? எனவும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால் பல நேரங்களில் நாம் வளரும்வரை பெற்றோரின், உதவிகளை வேண்டிய மட்டும் பெற்றுக் கொள்கிறோம். வளர்ந்த பிறகு பெற்றோர்களை, தாயை முற்றிலுமாக மறந்துபோய் விடுகின்றோம். இந்நிலை மாறவேண்டும். நாமும் அவர்களுக்காக தியாகங்களை, துன்பங்களை மேற்கொள்ளத் துணியவேண்டும்.

கர்நாடகா மாநிலத்தில் சகார தாலுகாவில் உள்ளது செட்டிசாரா கிராமம். இந்த கிராமத்தைச் சேர்ந்த பவன்குமார் என்ற 15 வயது சிறுவன், உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகின்றார். இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பவன்குமாரை, பாகுபாலி என்று பெருமையுடன் அழைக்கின்றனர். இதற்கு என்ன காரணம்? இவரது தாயார் தினமும் வீட்டு தேவைக்காக அரை கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று தண்ணீர் கொண்டு வந்துள்ளார். தினமும் தண்ணீர் கொண்டு வர, இரண்டு மணி நேரம் அம்மா படும் கஷ்டத்தை பார்த்து வேதனைப்பட்ட பவன்குமார், தன்னுடைய அம்மாவின் கஷ்டத்தை நிரந்தரமாக தீர்க்க முடிவு எடுத்தார். இதற்காக வீட்டின் பின் பகுதியில் கிணறு தோண்ட முடிவு எடுத்தார். அதுவும் தனி ஆளாக கிணறு வெட்ட முடிவு எடுத்தார். பள்ளி விடுமுறை நாட்களில் தினசரி கிணறு வெட்டி அம்மாவின் தண்ணீர் கஷ்டத்தைப் போக்கினார்.

இது பற்றி பவன் குமார் கூறுகையில், "இந்த கிணறு வெட்டத் துவங்கிய போது, பலர் ஏன் இந்த கஷ்டம்?, கிணறு வெட்ட வேண்டாம்' என்று கூறினார்கள். எனது நண்பர்கள் மட்டுமல்ல, எனது தாயாரும் 'நீ கஷ்டப்பட வேண்டாம், நான் எப்போதும் போல் கிராம கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வருகின்றேன்' என்று கூறினார். ஆனால் நான்தான் வீட்டின் பின்புறம் தனி ஆளாக 45 அடி ஆழத்திற்கு கிணறு வெட்டினேன். தொடக்கத்தில் தண்ணீரும் கிடைக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய கையில் முறிவு ஏற்ப்பட்டது. எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அதன்பிறகு கிணறு வெட்டும் இரண்டு தொழிலாளர்களின் உதவியுடன் மேலும் 10 அடி ஆழம் கிணறு தோண்டினேன். இப்போது தண்ணீர் கிடைத்துள்ளது. இதன்மூலம் என்னுடைய அம்மாவின் நீண்ட கால கஷ்டத்தை போக்கியுள்ளேன். அது மட்டுமல்லாமல் எங்கள் கிராமத்தில் இருக்கும் மற்றவர்களும், இந்த கிணற்றில் இருந்து தண்ணீர் சேகரித்து கொள்ளவும் பேருதவியாக இருக்கின்றேன்" என்று கூறுகின்றார். ஒரு மகன் தன்னுடைய தாயின் மீது கொண்ட அன்பிற்கு இதைவிட மிகச் சிறந்த எடுத்துக்காட்டு இருக்க முடியாது. ஆகவே, நாமும் நமக்காக பலவேறு தியாகங்களை மேற்கொள்ளும் நம் பெற்றோருக் காக தாய்க்காக தியாகங்களை மேற்கொள் வோம். அது மட்டுமல்லாமல் மரியன்னையைப் போன்று இறைத் திருவுளம் நிறைவேற துன்பங்களை ஏற்போம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்பணி பாக்கிய ரஞ்சிற்.......

வீட்டிலேயே கழிந்திருக்கிறது.

பற்றிக்ஸ் கல்லூரியில் படித்த பாக்கியரஞ்சித், பாக்கியரெஜினோல்ட் அண்ணாக்களின் அம்மா, எங்களுக்கு பேபி அன்டா வீட்டு இள நீலநிற தகர கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனால், எளிமையான அவர்கள் வீட்டிலும், பரந்த அடிவளவிலும் நாங்கள் விளையாடி கழித்த பொழுதுகளின் நினைவுகள் இன்றும் பசுமையாக உலாவந்து கொண்டிருக்கும். பேபி அன்டாவின் வீட்டிற்கு முன் வீட்டில் இருந்த பரி யோவானில் படித்த சிவகுமார் அண்ணாவும் (SJC87) ரெஜியும் இணைய, நாங்கள் ஆறு பேரும் குழு பிரித்து, கிரிக்கெட்டும் கால்பந்தும் விளையாடுவோம். விடுமுறைக்கால மத்தியான பொழுதுகளில்

தாயமும் 304ம் 532ம் விளையாட பழகியதும் அந்த நாட்களில் தான். சிவக்குமார் அண்ணா Chess விளையாடவும் பழக்கித்தருவார்.

பாக்கியரஞ்சிற் அண்ணா பகிடி விட முதலே அவரே சிரிக்கத் தொடங்கி விடுவார். சத்தமாக, இழுத்து இழுத்து பாக்கியரஞ்சிற் அண்ணா சிரிக்கும் சிரிப்பு இப்போதும் காதில் ஒலிக்கிறது. பாடசாலைக் காலங்களில் பலமான சென்.பற்றிக்ஸ் அணியின் உதைபந்தாட்ட அணியில் பாக்கியரஞ்சித் அண்ணா இடம்பிடித்திருந்தார்.

1994 டிசம்பரில் மீண்டும் யாழ்ப்பாணம் போன போது பாக்கியரஞ்சித் அண்ணா குருமடத்தில் இருந்து விடுமுறையில் வீடு வந்திருந்தார்.

ஆறு வருட குருமட வாழ்க்கை பாக்கியரஞ்சிற் அண்ணாவின் சத்தமாக சிரித்துக் கொண்டே பகிடியாக கதைக்கும் பாங்கை மாற்றவில்லை என்று அன்றைய சந்திப்பில் உணரமுடிந்தது.

“என்ட முதல் பூசைக்கு நீர் வருவீரா.. என்னிட்ட தான் பாவமன்னிப்பு எடுக்கோணும்.. பிறகு தான் நற்கருணை தருவன்” என்று பாக்கியரஞ்சித் அண்ணா தனக்கே உரித்தான பாணியில் பகிடியாக வெருட்டியதும் நினைவில் வருகிறது. யாழ் மறைமாவட்ட குருவாக பணியாற்ற பல குருக்களும் ஆலோசனை கூறுகையில், பாக்கியரஞ்சித் அண்ணா மன்னார் மறை மாவட்டத்தை தனது இறைபணிக்காக தேர்வு செய்தார்.

**ஜூட் பிரகாஷ்**
மெல்போண்

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் தோமஸ் ஆண்டகை மன்னார் மறைமாவட்ட களப்பணியின் சுமைகளை எடுத்துக்கூறியும் தேவைகள் அதிகமுள்ள புதிய மறை மாவட்டத்தில் தன்னை குரு மாணவனாக பாக்கியரஞ்சிற் அண்ணா இணைத்துக்கொண்டார். 1997ம் ஆண்டு மிக நெருக்கடியான போர் சூழலில் முன்னாள் மன்னார் மறைமாவட்ட

## ஓர் அனுபவப் பகிர்வு

1987 ஒபரேஷன் லிபரேஷன் காலத்தில், வாழ்வில் முதல் முதலாக பங்கர் வெட்டியதும் இந்த அண்ணாக்களோடு சேர்ந்து தான். அவையளின் அடிவளவில் நின்ற நெல்லி மரத்திற்கு கிழே, மொங்கானாலும் மம்பட்டியாலும் பங்கர் வெட்டிக் கொண்டு போக, பாறாங்கல்லு தட்டுபட்டு, பங்கர் வெட்டுவது கடினமானதும் ஞாபகம் வருகிறது.

இந்தியன் ஆமியுடனான அடிபாடு தொடங்கிய காலங்களில், பாக்கியரஞ்சித் அண்ணா பாதராக போறாராம் என்று கேள்விபட்டது ஞாபகம். தேவன் அண்ணேயின் காரில் பாக்கியரஞ்சிற் அண்ணாவை ஏற்றிக் கொண்டு, கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த மாட்டீனார் குருமடத்தில் அவரைக் கொண்டு போய் இறக்க நாங்களும் போயிருந்தோம்.

பாக்கியரஞ்சித் அண்ணாவை குருமடத்தில் சேர்த்தது 3 ஜனவரி 1988.

ஆயர் இராயப்பு யோசப்புவினால் மறைமாவட்ட பேராலயத்தில் குருவாக திருநிலைபடுத்தப்பட்டு, மன்னார் மறை மாவட்டத்தில் மக்களுக்காக பணியாற்றும் இறைபணியாளரானார்

பாக்கியரஞ்சித் அண்ணா.

மன்னார் மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் கல்வித் தரத்தை உயர்த்தவும், சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும் தனது குருத்துவ சேவையைப் பாக்கியரஞ்சிற் அண்ணா நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார். தனது கடைசிக் காலங்களில் கத்தோலிக்க திருச்சபையின் அகதிகளின் நலன் பேணும் Jesuit Refugee Service (JRS) அமைப்பின் மன்னார் மாவட்ட பொறுப்பாளராக பாக்கியரஞ்சிற் அண்ணா பணியாற்றிக் கொண்டிருந்தார்.

பகிர்வு அடுத்த இதழில் தொடரும்.........

**கனிய மண்.....** மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வுக்கு எதிராகவும் மன்னார் பகுதியில் அமைக்கப்பட்ட உயர் மின் வலு காற்றாடிகளினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும்,தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற வீதிகள் தரமற்றதாககாணப்படுகின்றமை குறித்தும், போதைப்பொருள் கடத்தலின் தளமாக மன்னாரை மாற்றி மன்னார் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்களுக்கு குறித்த நடவடிக்கைகளின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் மத தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், நகர சபை பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள் , சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் பின் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை வழங்கி வைத்தனர். மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் இவ்விடயம் தொடர்பில் உரிய உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்தார்.

காற்றாலை மின்திட்டங்களில் இருந்து மன்னார் தீவை பாதுகாப்போம். மன்னாரில் உள்ள காற்றலையானது, அங்கு முக்கிய வாழ்வாதாரமாக காணப்படும் தொழிலான மீன்பிடி துறையை வெகுவாக பாதித்துள்ளதாக மன்னார் வாழ் மக்கள் கருதுகின்றனர். மக்களின் தொடர் எதிர்ப்புக்கு மத்தியிலும் மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக கனியமண் அகழ்வு மற்று ஆய்வு பணிகள் சட்டவிரோதமாக இடம் பெறுவதாகவும் அதே நேரம் மீன்வளம் மற்றும் கடல் வளங்களை அழிக்கும் காற்றாலை மின்செயற்திட்டத்தை மன்னார் தீவக பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டாம் என மக்கள் போராட்டங்கள் நடாத்தி வருகின்றனா். -குறிப்பாக கனிய மணல் அகழ்வினால் எதிர் காலத்தில் மன்னார் தீவு பகுதியில் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட உள்ளதோடு, காற்றாலை மின் உற்பத்தியால் மீனவர்களின் வாழ்வாதாரம் எதிர்காலத்தில் முழுமையாக பாதிக்கப்படும் என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த இரு நடவடிக்கைகளையும் உடனடியாக மன்னார் தீவில் நிறுத்தக்கோரி குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையின் அழகிய தீவு அரக்கர்கள் பிடியில், இச் சிறிய தீவின் நிலப்பரப்பில் கனிய மண் அகழ்ந்து இத்தீவு முழுவதுமாக கடலில் மூழ்கடிக்கும் செயல்பாட்டை உடன் நிறுத்து, காற்றாலை மின் கோபுரங்களை அமைத்து மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயல்பாட்டை உடன் நிறுத்து,எம்மை உயிருடன் வாழவிடு, ஆர்ப்பாட்டமே எங்கள் வாழ்க்கையா?? உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## பீடப்பணியாளர்கள்

ஜெயபாலாஜி, முருங்கன்

*எங்கள் குட்டிக் குருக்கள்*
*உங்கள் பிஞ்சுப் பாதங்களுக்கு*
*எங்கள் அன்பு முத்தங்கள்*
*எங்களுக்கு முன்னரே ஆலயம் சென்று ஆயத்தங்கள் செய்து*
*தீபத்தோடும் தூபத்தோடும்......*
*பீடப்பணியாளருக்கான ஆடையை அணிந்தவுடன்*
*எங்கிருந்த வருகிறது உங்களுக்கு அந்த அவதானம்?*
*அருட்பணியாளர் மீது கண்களைப் பதித்துக் கொண்டு*
*அவரது கண்ணசைவிற்காக காத்துக் கொண்டு...*
*வேகமாகவும் நிதானமாகவும்...*
*அப்பமும் இரசமும் இயேசுவின் திருவுடலாகவும்*
*இரத்தமாகவும் மாறும் அந்த அற்புத நிகழ்வுக்கு*
*அங்கிருக்கும் சாட்சிகள் நீங்கள்*
*உங்கள் பிஞ்சுப் பாதங்களுக்கு*
*எங்கள் அன்பு முத்தங்கள்*
*காணிக்கை பெற வரும்போது*
*எங்களைத் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளாத*
*உங்கள் பெரிய மனித தோறணை வியப்பாயிருக்கும்*
*நாங்கள் அன்று பீடப்பணியானர்களாய் பார்த்தவர்கள்*
*இன்று அருட்பணியாளர்களாய் அருமையாய்*
*மறையுரை ஆற்றுவதைக் கேட்கையில் பூரித்துப் போவோம்*
*சமுதாயத்தின் பொறுப்பான பதவிகளில்*
*காணும் போது பெருமை கொள்வோம்*
*மாறுதலாய் ஒரு சிலரைக் கண்டு மனம் வருந்துவதுமுண்டு*
*நீங்கள் எப்போதும் பீடப்பணியாளர்களாக இருக்க முடியாது*
*ஆனால் இன்று நீங்கள் கொண்டுள்ள இறைபக்தி , தேவபயம் , நற்பண்புகள்*
*என்றும் உங்களோடு இருக்க வேண்டும்*
*கல்வியில் கருத்தாய் இருங்கள்*
*கடமையை உயிராய்க் கொள்ளுங்கள்*
*நன்றியோடு உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்*
*உங்களுக்காக எங்கள் மனறாட்டுகள்*

## உறுதியான விசுவாசம்



இலங்கையில் பிறந்ததால்
இறவைா ஏன் இந்த அவலம்
இன்னல்கள் தீர்த்திட
யாரும் இல்லையே

கொடுமையின் ஆட்சியால்
கருகிப் போன எம் வாழ்வு
செழித்திடும் வாழ்க்கையாய்
மாறுவது எப்போதோ?

மூன்று வேளை உணவு உண்ண
வீட்டினிலே எதுவுமில்லை
காசு கொண்டு அலைந்தாலும்
உணவு தருவார் யாருமில்லை

திரும்புகின்ற திசையெல்லாம்
வரிசையிலே மக்கள் கூட்டம்
அதற்குள்ளும் கொள்ளையிட
அலைகிறது பணக்கூட்டம்

பச்சிளம் பாலரெல்லாம்
பாலின்றித் தவிக்கும் நிலை
போசணைக் குறைவதனால்
போய் முடியுது மனித வாழ்க்கை

இறைவா ஒன்றை உணர்த்துகின்றீர்
எல்லோரும் சமமென்று இந்நாளில்
ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லோரும்
வாழவேண்டும் உம்மாலே நிறைவாழ்வு

பரிதவிக்கும் எம் வாழ்வை
பதப்படுத்த நின் அருள் வேண்டும்
உறுதியான விசுவாசமே
உண்மையான மாற்றம் தரும்.

ஆக்கம் :- சுஜீவன்
மடுரோட்



## கவிதைப்பூக்கள்

### புதுயுகம் படைக்க புறப்படலாம் இளையவரோடு......

*மனித வாழ்வில் முக்கிய பருவம்*
*இளமைப்பருவம்*
*அளப்பரிய ஆற்றலை தன்னகத்தே*
*கொண்டது அப்பருவம்*
*பிறப்பிலே கொடுக்கப்பட்ட இலவச கொடை*

*இவ்வாற்றலை அறிவியல் ஆன்மீக*
*ரீதியாக திட்டமிட்டு செயற்பட்டால்*
*இளையோர் வாழ்விலும் சமூகத்திலும்*
*வெற்றியடைவது உறுதி*

*வெற்றி காண்பதில் சிலர் மட்டுமே*
*இருக்கின்றார்கள்*
*பலர் இல்லை என்பது வருத்தம்*
*இளையோரில் பலர் தங்களுக்கு இருக்கும்*
*ஆற்றலை கண்டும் காணாது இருப்பது*
*பெரும் கவலை தரும் விடயம்*


*சாதிக்க கூடியவர்கள் ஆற்றல் மிக்கவர்கள்*
*இளையோர்*
*நினைத்ததை நிறைவாக முடிக்கக் கூடியவர்கள்*
*உறுதியான நோக்கம் கொண்டவர்கள்*
*உண்மைக்கும் நீதிக்கும் சாட்சியம் சொல்பவர்கள்*
*வரலாற்றை மாற்றிவடிவமைக்கக்*
*கூடியவர்கள் இளையோர்கள்*

*மனித வாழ்வில் இளையோர் எல்லையற்ற*
*ஆற்றல்களின் ஊற்று*
*கணக்கிட முடியாத திறமைகளின் புதையல்*
*இரும்பல்ல இளைஞர் இதயம்*
*துரும்பல்ல தூக்கி எறிய*
*கரும்பல்ல முற்றும் இனிக்க*
*நெருப்பல்ல முற்றும் எரிய*
*இது இளையோருக்கு முற்றும்*
*பொருத்தமான முது மொழி*

*திறமைக்கு இருப்பிடம் இளையோர்*
*புதுமைகள் படைப்பதில் வல்லவர்கள் இவர்கள்*
*நாமும் சேர்ந்து புதுயுகம் படைக்க*
*இளையவரோடு புறப்படலாம்*
*வெற்றி நிச்சயம் நாளை நமதே*

***அ. ஜெயநாயகம் நோயல் டானியேல்***
***வட்டக்கண்டல்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுநிலையினர் ஞாயிறு

**"எதிர்நோக்கின் சாட்சிகளாய் ஒன்றித்து பயணிப்போம்"**

09.10.2022

*உலகத் திருஅவைக்காக செபிப்போம்! நற்செய்திப் பணியில் எம்மை அர்ப்பணிப்போம்!! திரு அவையில் ஒன்றித்துப் பயணிப்போம்!!!*

"எதிர்நோக்கின் சாட்சிகளாய் ஒன்றித்து பயணிப்போம்" எனும் கருப்பொருளின் கீழ் தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினத்தை அர்த்தமுள்ளதாக கொண்டாட ஆயத்தமாகும் இவ்வேளையில், இச்செய்தியினூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன். கிறிஸ்துவின் சாட்சியாளர்கள், அவருக்கு சான்று பகரும் வாழ்வு வாழ்ந்தேயாக வேண்டும். இறைவனின் வார்த்தையை நாம் எடுத்துச் சொல்வதாயின் தொடக்க நூலில் உள்ள படி இறைவன் தேர்ந்தெடுத்த இறைவாக்கினர்கள் செய்ததைப் போல் நாமும் இதனைச் செய்ய வேண்டும்.

**மன்னார் மறைமாவட்ட பொதுநிலை ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை ஞ. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார்**

கத்தோலிக்க பொது நிலையினர் சார்பான அப்போஸ்தலிக்க பணிக்குழுக்கள், அமைப்புக்கள், பக்தி சபைகள் பங்களிக்கும் திருஅவையை கட்டியெழுப்ப அயராது உழைத்து திருஅவையின் தூதுப்பணியில் பங்காளிகளாக செயற்படுகின்றனர். இருப்பினும் கடந்த ஆண்டுகளில் நமது நாடும் முழு உலகமும் முகங்கொடுத்த 'கொவிட் 19' தொற்று நோய் தாக்கத்தினால் நம் நாடு சந்தித்த சவால்களையும் துயரங்களையும் நாம் அறிவோம் தற்போதைய சூழ்நிலையில் எமது நாடு மீண்டும் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பொருளாதார வீழ்ச்சி, அரசியல் ஸ்திரமற்ற தன்மை, அதிகார மோகம், இனமத அடிப்படை வாதம் வேலையின்மை, வறுமை போன்ற பல்வேறு சவால்கள் மக்கள் மத்தியில் தடுமாற்றத்தையும் நிச்சயமற்ற எதிர் காலத்தையும் உருவாக்கியுள்ளது. இச்சவால்களுக்கு மத்தியில் மக்கள் உழைத்து களைத்து தங்கள் வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப தம்மாலான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் இறைமக்கள் இன்று ஆழமான விசுவாசத்துடன், திக்கற்றவர்களாக வாழும் மக்களுக்கு இறைநம்பி வாழக்கையை விதைக்க அழைக்கப் படுகின்றனர்.

*திரு. பிலிப்புப்பிள்ளை*
*தலைவர் பொது நிலையினர் பேரவை.*

"கிறிஸ்துவின் விசுவாசிகள்" எனும் சுற்றுமடலில் கூறப்படுவது போல பொதுநிலையினர் நற்செய்தி அறிவிப்புப் பணியினூடாக திருஅவையின் பிரதான தூதுப்பணியில் பங்காளிகளாகின்றனர். இதனூடாக இறைவார்த்தையை மையமாகக் கொண்டு அருட்சாதன வாழ்வின் வழியாக சமுதாயத்தை சீர்படுத்தவும் கட்டியெழுப்பவும் முன்வருகின்றனர். ஆகவே திருஅவையானது தனது தூதுப்பணியில் பங்கெடுக்கும் பொதுநிலையினரின் மாண்பினை அடையாளம் கண்டு, அவர்களும் திருஅவைக்கு கொறுப்புக் கூறும் கடப்பாடு உடையவர்களாக காணப்படுகின்றார்கள். உலகியல் காரியங்களில் ஈடுபடும் பொதுநிலையினரின் தனித்துவமான இயல்பு ஒரு சாட்சிய வாழ்விற்கு அவர்களை இட்டுச் செல்கிறது. தூய ஆவியின் வல்லமையால் உலகில் கிறிஸ்துவுக்கு சான்று பகர அழைப்பு விடப்படுகின்றது.

திருமுழுக்கின் வழியாக பொதுநிலையினர் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்கு ரைத்தல் எனும் முப்பெரும் பணிகளில் குருக்கள், துறவிகளோடு இணைந்து தங்களின் பொதுக்குருத்துவ அழைத்தலனூடாக திருஅவையின் தூதுப்பணியல் பங்கெடுத்து இணைந்து பொறுப்புக் கூறும் உடன் ஊழியர்களாக வாழ அழைக்கப்படுகின்றனர். திருத்தூதர் பணி 10:41 "ஆயினும் அனைத்து மக்களுக்குமல்ல சாட்சிகளாக கடவுள் முன் தேர்ந்து கொண்டவர்களுக்கு மட்டுமே அவர் காட்சியளித்தார். இறந்த அவர் உயிர்த்தெழுந்த பின்பு அவரோடு உண்டு குடித்த நாங்களே சாட்சிகள்." இதனூடாக இறைவன் நம்மைத் தேர்ந்தெடுத்த விதம் எமக்குப் புலனா கின்றது. இவ் அழைப்பில் எமக்குப் புலனாவது யாதெனில் நாம் கடவுளை தேர்ந்து கொள்ளவில்லை. மாறாக கடவுளே நம்மைத்தேர்ந்து கொண்டுள்ளார் என்பதாகும்.

**பொதுநிலையினர் ஞாயிறு அடுத்த இதழில் தொடரும்.....**

## புனித வின்சன் டி போல் சபையினரின் வருடாந்த பெருவிழா 24.09.2022

புனித வின்சன் டி போல் சபையின் வருடாந்த பெருவிழா - 24.09.2022 - மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டீ போல் சபையின் மத்திய குழுவின் இயக்குனரும், ஆன்மீக தலைவருமான அருட்பணி எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் அவர்களின் வழி காட்லின் கீழ். தலைவர் திரு. B.S.எமில் குலாஸ் அவர்களின் ஒழுங்கமைப்பில். இன்று 24.09.2022 காலை 09.00 மணிக்கு எமது சபையின் ஸ்தாப கரான புனித வின்சன் டீ போல் திருவிழா குடும்பநல பணி மையத்தில் திருவிழா திருப்பலி ஆரம்பமானது. அழைக்கப்பட்டவர்களுக்கு தேநீர் விருந்து பசாரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து தலைவர் இன்றைய கூட்டத்தை முன்னெடுத்தார். ஆரம்ப செபம் நடைபெற்றது. . இக் கூட்டத்திற்கு வருகைதாராதவர்களின் மன்னிப்பு கடிதம் வாசிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் 75 பேர்கள் கலந்துகொண்டனர்.

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி இல.231

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்**

1. வயலட் ஜோண்சன் யாழ்ப்பாணம்
2. யே. தரிசினி வவுனியா
3. சாரா - மாவிலங்கேணி

**விடைகளை எழுதி அனுப்பியவயவர்களில் 84 பேர் தெரிவு செய்யப்பட்டபவர்களி விபரம்**

பி. செனோரிக்கா டலிமா, தலைமன்னார்
நி. தரிசினி, கள்ளிகட்டைக்காடு
நா. எரின் டினோசிகன், இத்திக்கண்டல்
வெனிஸ்ரா, தோட்டவெளி
ச. நிறோஜன், கள்ளிகட்டைக்காடு
சூசான் முறாய்ஸ் யேசுதா, சுண்டிக்குளி
றபேக்கா பற்றிக், சின்னக்கடை
பற்றிக், சின்னக்கடை
ரேறியன், பள்ளிமுனை
றேச்சல், பள்ளிமுனை
எமி பிகிறாடோ, பள்ளிமுனை
லிவி பிகிறாடோ, பள்ளிமுனை
யூடிஜான்சிராணி, வலைப்பாடு
ஜோன்பொஸ்கோ, பள்ளிமுனை
டிறைக்ஷா, விடத்தல்தீவு
தக்ஷிதா, ஜோசப்வாஸ்நகர்
தெர்ஷனா, பள்ளக்கமம்
கிமோயமர் ஜோய்னஸ், பள்ளக்கமம்
லூட்ஸ் வேழினி, தாழ்வுபாடு
அகுஸ்தீன் இசக்கியேல், ஜோசப்வாஸ்நகர்
வேந்தக்கோன் சியாமளா, அளவக்கை
அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம்
ஆ. றூபன் ஜீசஸ் டலிமா, வங்காலை
றூ. றிஸ்மா டலிமா, வங்காலை
றூ. யூட்ஸ்சிக்கா டலிமா, வங்காலை
றூ. மேரி பிறக்சி டயஸ், வங்காலை
வின்சன் யோகவதி, பெரியநீலாசேனை
அன்ரன் ஜெயக்குமார் அபர்ணா, தோட்டவெளி
சந்தியோகு போல்றொபின்சன், பெரியநீலாசேனை
புஸ்பா சேவியர், திருகோணமலை
பி. லக்ஷனா, அச்சங்குளம்
கி. கிறிஸ்ரின் அர்ச்சனா, சூரியகட்டைக்காடு
ச. மரியகொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை
சொ. சைலோ, கட்டைக்காடு
கி. ஆன் சாலிக்கா, கட்டைக்காடு
ச. டவ்சன், சூரியகட்டைக்காடு
டிலக்சன், மருக்கரை
லக்சிக்கா, துள்ளுக்குடியிருப்பு
சி. நோயல் கிறிஸ்ரி றோச், பள்ளிமுனை
லியாஷா கெஷேல்,பள்ளிமுனை
கி. சாணுஜன், சூரியகட்டைக்காடு
விஜித்குமார் ஜெனிவாறோஸ், ஓலைத்தொடுவாய்
பா. அந்தோனிராஜா, இத்திக்கண்டல்
றெனுஷா, கார்மேல் நகர்
நி. யாழிசன், செட்டிகுளம்
அ. ஆன் சோபியா, பெரியகட்டைக்காடு
அ. செலின் சுரேக்கா, சிறுத்தோப்பு
ஜெகநாதன், மடுக்கரை
ந. நயோசன், சிறுத்தோப்பு
சறோஜினி, ஜோசப்வாஸ்நகர்
விஜித்குமார் ஜெரினா றோஸ், ஓலைத்தொடுவாய்
ச. மரிய துசாந், கட்டைக்காடு
றெ. லஷோன்ரன், பெரியபண்டிவிரிச்சான்
ஜெ. மெக்ஸ்வெல் குரூஸ், பொன்தீவுகண்டல்
ஜெ. அயானா குரூஸ், பொன்தீவுகண்டல்
இ. ஆன் செலின், பொன்தீவுகண்டல்
லீலாவதி, சாந்திபுரம்
ஜீவரெட்ணம் யசிந்தா, விடத்தல்தீவு
ஜெஸ்லினா, கங்காணிதீவு
பெபிஷா, புதுக்கமம்
கிஷாளினி பரமேஸ்வரன், செட்டிகுளம்
அபி, புதுக்கமம்
கல்பனா, ஆசிக்குளம்
கலிஸ்ரஸ், ஆசிக்குளம்
இருதயமேரி, ஆசிக்குளம்
மடோனா, ஆசிக்குளம்
அ. ஜெபதர்மினி, சாளாம்பன்
யோ. கனிசிக்கா, சாளாம்பன்
தே. இருதயமலர், சாளாம்பன்
ப. சுவாதிகா பறுனாந்து, பேசாலை
செவோன்சன் குரூஸ், பேசாலை
றொசிகா லோகு, பேசாலை
நோபட் பறுனாந்து பெனோன், பேசாலை
சைலோ பறுனாந்து, பேசாலை
மகிபன், பெற்றா
லயனிகா, ஆட்காட்டிவெளி
பியூநிக்கா, ஆட்காட்டிவெளி
அனுசியா, ஆண்டாங்குளம்
மரிய லிப்னா, தலைமன்னார்
சகாயசுகன்யா, தலைமன்னார்
பிரான்சிஸ்கா, வங்காலை (ப/வளனார் சபை கன்னியர் மடம்)

## வானம்......

இலவச பாடநூல் கிடைக்கப்பட்ட ஆசிரியர்களது மாணவர்களது பரவசநிலை இவ்வளவிற்கு மத்தியிலும் தான் கல்வி அபிவிருத்திக்கான அதிகாரி சிரிக்கமுயற்சிக்கின்றான். மூச்சடைப்பதாற் போலிருக்கிறது தான் தரிசிக்க வேண்டிய பாடசாலையை நெருங்கி விட்டான். "அம்மா" என்றொரு அலறல் அதிர்ச்சியில் திரும்பிப் பார்க்கின்றான். ஆசிரியர் ஓங்கி விட்ட உதை தாங்காமல் மாணவன் ஒருவன் எழுப்பிய அவலக் குரல் அது .

"ஏன் அடிக்கிறீர்கள்" நான் "வேற என்ன சேர் செய்யிற? உணர்ச்சிவசப்பட்ட நிலையில் குமுறிப் போயிருந்த ஆசிரியர் ஓரளவு சுயநினைவு பெறுகின்றார்!

"பாருங்க சேர் இந்த இலவசப் புத்தகங்களைப் பெற்று கொள்ளுறது எண்டா எவ்வளவு கஸ்டம் எண்டு உங்களுக்கு தெரியும் தானே சேர்... இங்க புத்தகங்கள் வந்து சேர்ந்து, கிடைக்கிற புத்தகங்கள பங்கு வைச்சு ஒப்படைக்கிறதுகுள்ள இரண்டு தவணைகள் ஏன் சில வேளைகளில் மூன்று தவணைகளும் முடிந்திடும் புத்தகம் கிடைத்தது கிடைக்காதது பற்றி கவலையில்ல நாங்கள் பாடதிட்டத்தை ஒழுங்காக முடிக்க வேணும் இல்லையெண்டா ஆயிரத்தெட்டு கேள்விகள், குறைகண்டுபிடிப்பு கள், குற்றச்சாட்டுகள் இதுக்கெல்லாம் பதிலளிக்க பயந்து நான் வவுனியாவுக்கு போயிருந்த போது என்ர சொந்த காசில போட்டோக் கொப்பி எடுத்துக்கொண்டு வந்தபாடப்புத்தக பிரதிகள் சேர் அதுவும் பிரமணாலங்குள செக் பொயின்றில இருந்த ஆமிக்காரன் விடமாட்டன் என்றிட்டான் பெர்யவண்ட காலில விழாத குறையாக கெஞ்சி மன்றாடி கொண்டு வந்து இவங்களுக்கு பகிர்ந்து கொடுத்திருந்தன் சேர்... அதைத் தொலைச்சிப் போட்டு வெறுங்கையாக வந்து நிக்கிறான் சேர்.. ஆத்திரம் வருமா இல்லையா சொல்லுங்க சேர்.....

என்னையும் ஆத்திரப்பட வைத்துவிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் பேசிய ஆசிரியரது பணியிலே அர்ப்பணிப்பும் ஆத்திரப்படுவதில் நியாயமும் தென்பட்ட போதினும் " ஆத்திர படுவதில் அர்த்தம் இருக்க" ஆனால் அடிச்சதில தான் நியாயமில்ல போல எனக்கு தோணுது.. ஆசிரியரது முகத்தை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டு கேட்கிறேன். அவர் தலையை குனிந்து கொள்கிறார். "தலையை நிமிர்ந்து பாருங்க சேர் இதுதானா நீங்க கொடுத்த அந்த மாணவன் தொலைத்த பாடநூல் போட்டோ பிரதிகள்" எனது ஒபிஸ் பேக்கினுள்ளிருந்து எடுத்துக் கொடுத்த போட்டோ பிரதிகளை தொலைந்து போன புதையலைக் கண்டவர்கள் போல அந்த ஆசிரியரும், மாணவனும் ஆச்சரியம் மேவிட உற்றுப்பார்கிகின்றனர். " உங்களிடம் எப்படி இது? ஒரே நேரத்தில் அவர்கள் இருவரதும் முகங்களிலும் இந்த கேள்விக் குறி"

அதற்குப் புன்னகை ஒன்றை பதிலாக்கி அவ்விடத்தை விட்டு நகர்கின்றேன். நான் வரும் வழியிலே தேனீர் கடையில் கை துடைப்பதற்கு எனக்கு தரப்பட்ட பழைய பேப்பரை விரித்துப் பார்த்து அதனுடன் சேர்ந்த எல்லாவற்றையும் கடைக்காரனிடம் காசு கொடுத்து வாங்கியதையும் அவற்றை அன்று உதைவாங்கிய மாணவனின் தந்தை மகனுக்க தெரியாமல் திருடிக் கொண்டு போய் அதைக் கடைக்காரனிடம் கொடுத்து அதற்காக வாங்கிச் சென்ற ஒரு இறாத்தல் பாணின் மூலம் தான் அவனத குடும்பத்தில் இருந்தவர்களது வயிறு பல நாட்களுக்கு பின்னர் ஓரளவு நனைந்தது என்பதையும் அவர்களுக்கு கூறினால் மீண்டும் மீண்டும் அந்த போட்டோ பிரதிகள் பாண் வடிவிலே அந்த வயிறுகளை நனைப்பதை தடைசெய்யும் என்ற நோக்கிலே நடந்ததைக் கூறாமல் புன்னகையுடன் செல்கின்ற என்னை ஆச்சரியத்துடன் பார்த்து நிற்கின்றார்கள். அதே புன்னகை மாறாமல் அடுத்த வகுப்பு என கருதப்பட்ட புளிய மரத்தைத் தாண்டிச் செல்கின்ற என்னைக் கண்டு நெளிகின்றார் ஓர் ஆசிரியர். முழங்காலில் இருக்கின்ற மாணவனையும், ஆசிரியரையும் மாறி மாறி பார்க்கின்றேன்.

"வீட்டுப்பாடம் கொடுத்து விட்டால் ஒழுங்கா செய்து கொண்டு வருகிறார்கள் இல்ல சார்" இரவிலே சாப்பாடு என்னும் பெயரில் விறகு அடுப்பின் நெருப்புத்தணல் வெளிச்சத்தில் எதையோ வயிற்றினுள் தள்ளி காலம் ஓட்டுகின்ற இம் மாணவர்களால் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் (300.00) முந்நூறு ரூபா விற்கும் போது எப்படி இரவில் வீட்டுப்பாடம் செய்ய முடியும் என்பத நன்கு தெரிந்தும் என்னால் வேறு என்னதான் செய்ய முடியும்" என்னைப் பயத்துடன் நோக்கும் அவரது பார்வை பவ்வியமாக எடுத்துக் கூறுகிறது.

அவரது பார்வைக்கு பதில் கூறுமுன் என் சிந்தனையை திசை திருப்புகிறது இயற்கை "சோ" வென ஓலமிட்டுக் கொண்டு பொல.. பொல.. என பெய்து கொண்டு வரும் மழையைக் கண்டு பதற்றமும் பரபரப்பும் அடைந்த ஆசிரியர்களும் மாணவர்களும் நிலத்திலே கிடந்த தமது புத்தகங்கள் கொப்பிகளைப் பொறுக்கி நனைய விடாமல் தமது உடுப்புகளுக்கள் செருகிக் கொள்வதில் கவனம் செலுத்தியதில் மழையில் நனைவதை மறந்து விடுகிறார்கள். முழங்காலில் இருந்த மாணவன் நிலத்திலே விரிக்கப்பட்டிருந்த யூ.என்.எச்.சி.ஆர். பொறிக்கப்பட்ட அன்பளிப்பு மெழு குசீலையை ஆசிரியரும் நானும் நனைந்து விடாமல் தலைக்கு மேலே தூக்கிப்பிடித்துக் கொண்டிருக்கின்றான். பாடசாலைகள்.

எல்லாவற்றிலும் பாடசாலைகள் முடிவதை மணியோசை நிர்ணயிக்க வன்னியிலே மழையோசை நிர்ணயிக்கிறது மழையில் நனைந்த வண்ணம் மாணவர்கள் எதையோ பாடுவது எனது காதிலே ஒலிக்கிறது ஆசிரியரிடம் கேட்கிறேன் "என்ன பாடுகிறார்கள்? "தமிழ் மொழி வாழ்த்து சார்" "வானமளந்ததனைத்தும் அளந்திடும் வண் மொழி வாழியவே! என பாடுறாங்க சேர்" ஆசிரியரும் என்னுடன் நனைந்த படி கூறுகின்றார்.

"இல்லையே.... வானம் பொழிந்தது அனைத்தும் நனைந்தது என்றல்லா பாடுகிறார்கள் ..." நான் கூறுகின்றேன்.

இல்ல சேர்.. தமிழ் மொழி வாழ்த்து தான் பாடுகிறார்கள்


ஏற்க மறுக்கிறது என் செவிகள் என் செவிகளில் வானம் பொழிந்தது அனைத்தும் நனைந்தது எனும் வரிகளே மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 1ம் ஆண்டு இதய அஞ்சலி



திரு.ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் சேவியர்(பொன்னு)
(செட்டிகுளம்)

பிறப்பு: 04-04-1942
இறப்பு: 25-09-2021

அப்பா உங்கள் பிரிவிற்கு விடைகாண முன்னே ஆண்டு 1 வந்துவிட்டது. அப்பா எங்கள் வீட்டின் ஆலமரம் சரிந்ததனால் உங்கள் பிள்ளைகள் நிலைகுலைந்து நிற்கின்றோம் அப்பா உங்கள் இறுதி சடங்கு தேரில உங்களை கொண்டு போகும் போதெல்லாம் காப்பாற்றி கொண்டு வந்தோமே அப்பா – ஆனால் நாங்கள் யாரும் அருகில் இல்லாத போது எங்களை தவிக்க விட்டு போய்விட்டீர்களே, அப்பா கொறோனா என்ற அரக்கன் உங்களை எங்களிடமிருந்து பிரித்து விட்டதே உங்கள் பிரிவு எங்களால் தாங்கவே முடியவில்லை அப்பா...உங்கள் ஆன்மா இறைவனிடம் இளைபாற இறைமகன் இயேசுவிடம் கண்ணீருடன் இரஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

"என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவான் 6:39)

மலர்வு 25 08 1938



உதிர்வு 02 09 2020

அமரர். இசிதோர் லேனம்மா (மலர்)
(உயிலங்குளம், மன்னார்)

எமதருமை அம்மாவே!
எம் குடும்பத்தின் குலவிளக்கே!
நானிலத்தில் மகத்துவமாய் வாழ்ந்தீரே
எம்வாழ்வு சிறந்திடவே வழிகாட்டினீரே
மண்ணக வாழ்வு போதுமென்று
விண்ணக வாழ்வுதனை கொண்டீரே- அம்மா
எம்மை விட்டு நீர் ஈராண்டு சென்றாலும்
மறையாது புன்முறுவல் பூத்த உம் வதனமும்
மங்காது உம் நினைவுகளும்- எம்
மனத்திரையில் என்றும் நிலைத்திடுமே
நீங்கள் என்றும் ஆண்டவன் சந்நிதியில்
இன்புற்று அமைதிபெற நிதமும் நாம்
வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
அன்பு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்

## ஆறாம்மாத நினைவஞ்சலி

மலர்வு 22 01 1973



உதிர்வு 16 03 2022

அமரர் பாலச்சந்திரன் லோகிதா
மடுறோட்

புன்னகைப் பூவே! எம் இல்லத்தின் மகுடமே !
எம் ஆருயிர் அம்மா!
அன்பின் இலக்கணத்தை நாளெல்லாம் சொல்லித் தந்தீர்கள்-
பாரினிலே நாம் உயர ஏணியாய் இருந்தீர்கள் பூமியிலே உம்
பயணம் போதுமென எண்ணி இறைவன் தம் அருகில் அழைத்துக்
கொண்டாரோ அவர் முகம் காணும் ஆசையுடன் எம்மைத்
தவிக்கவிட்டுச் சென்றதேனம்மா பார்க்கும் இடமெல்லாம் புன்னகை
பூத்த உம் முகமும் பசுமையான நினைவுகளும் ரணமாய்
கொல்லுதம்மா!
ஒரேயொரு தடவை அம்மா என்றழைக்க
ஓடோடி வாருங்கள் அம்மா!
விசுவாச வேரை குடும்பத்தில் விதைத்தீர்கள்
விதைத்த விதைகள் விருட்சமாகிட ஆண்டவன்
சந்நிதியில் நிதமும் மன்றாடுங்கள்!
ஆண்டவர் அரசில் இணைந்திடவும்
அவரை முகமுகமாய் கண்டிடவும்
புனிதர்கள் கூட்டத்திலே இணைந்து அவருக்கு
புகழ்பாடவும் உங்களுக்காய் அனுதினமும்
வேண்டுகின்றோம்.
பிரிவால் துயருறும்:- குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 28 12 1942



உதிர்வு 06 08 2022

அதிரியான் கிறிஸ்துமேரி வாஸ்
(வங்காலை 03)

அம்மா! உன் அன்பை அமுதாக்கி
அமுதை பாலாக்கி
பாலை உணவாக்கி
உணவை உணர்வாக்கி
உணர்வுகளை பரிசுத்தமாக்கி
வாழ வழி காட்டினாயே – உம்
வழிகாட்டலால் வாழ்கின்றோம்
நீங்கள் விட்டுச் சென்ற,
அன்பையும் ஒற்றுமையையும்
மன்னிப்பையும் பொறுமையையும்
தேவ பயத்துடன் என்றும் வாழ்வாக்குவோம்
உங்கள் ஆத்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம்.
சாந்தி ,சாந்தி ,சாந்தி

உங்கள் நினைவில் பாசமுடன் துயருறும் : கணவன்,
பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,உற்றார் உறவினர்கள்

## இல்லற வாழ்வில் 25ஆவது ஆண்டு

"கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்"



திரு.திருமதி.சகாயசீலன்,ஜெனற் விலிசியா பிகிறாடோ
03.09.1997 – 03.09.2022

இனிய இரு உள்ளங்கள்
இல்லறமே நல்லறம்
எனக் கண்டு
இறை ஆசியுடன்
இருபத்தைந்து
ஆண்டுகளைக் கடந்து
சவால்களை
சாதனையாக்கி
அன்பைப் பெருக்கி
நற்சுகத்தோடு மகிழ்ந்து
சுற்றமும் போற்றிட
திரு.திருமதி
சகாயசீலன், ஜெனற்
விலிசியா பிகிறாடோ
ஆகிய நீர் இருவரும்
பாரினில் பல்லாண்டு
காலம் வாழ்ந்திட மனதார
வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:

சகோதரர்கள்,
பிள்ளைகள், உற்றார்,
உறவினர்

## 70வது திருமண நிறைவு

1952.07.09 – 2022.07.09

மற்றும்

## 90வது பிறந்த தினம்

1932.12.28 – 2022.12.28



திரு.திருமதி சுவாந்த குரூஸ் நீக்கிலான் அடைக்கலம் தம்பதியினர்

*நான் ஒருபோதும் அவர்களை கைவிட மாட்டேன்*
*அவர்களை விட்டுப் பிரியவும் மாட்டேன்* (இணைச்சட்டம் 31:6)

இரு மனங்கள் இணைந்த எழில் கோலம் பூண்டு அழகுறவே பூத்திட்ட அருமையான பூக்கள் நீங்கள் 70 ஆண்டுகள் இல்லற வாழ்வை இறைவன் அருளால் நிறைவுற்று இன்பமாய் எம்மை ஈன்று அருமையாய் அன்போடு எம்மை வளர்த்திட்டீரே!
இறை அருளால் புனித நீக்கிலாரின் பரிந்துரையும் ஆசீரும் பெற்று வாழ்க நலமுடன் வாழ்க வளமுடன்

வாழ்த்துவோர் : பிள்ளைகள் , மருமக்கள் , பேரப்பிள்ளைகள் ,

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம்" (உரோ 14:8)

## 1 ஆம் ஆண்டு நினைவு

மண்ணில் 13 01 1938



விண்ணில் 06 09 2021

அமரர். லோறன்ஸ் பேதுரு
(கள்ளிகட்டைக்காடு)


உயிர் தந்த உறவே எங்கள் உணர்வுகளோடு கலந்து எங்கள் நினைவில் வாழும் அன்பு அப்பா! நீர் எம்மை விட்டு பிரிந்து ஆண்டு ஒன்று ஆன போதிலும் உம் புன்னகை முகத்துடன் எம் நினைவில் வாழ்கின்றீர். இவ்வுலகில் நாம் வாழ பலவற்றையும் கற்றுத்தந்தீர் அப்பா! உம் பிரிவால் ஏங்குகின்றோம். இயேசுவுடன் நித்தியமாய் நீர் வாழ இறைவனை என்றும் வேண்டி நிற்கின்றோம்.

உம்பிரிவால் துயருறும் மனைவி,பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 1 ஆம் ஆண்டு நினைவு

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோவான் 11:25)

பிறப்பு 18 10 1954



இறப்பு 02 09 2021

அமரர்.அந்தோனிப்பிள்ளை சவிரிப்பிள்ளை
(செட்டியார் கட்டையடம்பன)

எங்கள் அன்பு அப்பா ஆண்டொன்று மறைந்தாலும்
ஆறிடுமோ உங்கள் துயரம் எம்மை அன்போடும்
கண்டிப்போடும் வளர்த்து எங்களோடு இருந்த அந்த
அழகான நாட்களை நினைக்கின்றோம் மனநிறைவின்றி
எம்மை விட்டு பாதியில் சென்று விட்டுர்களே
என்றும் உங்கள் நினைவில் தாய், சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் [illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org